விலை ரூபா: 8.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரெண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 10 புதன்கிழமை (23.03.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 94




# பொதுக் கட்டமைப்பினை உருவாக்கும் வரை அரசின் நடவடிக்கைகளை புறக்கணிப்போம்

## 10 அகதிகள் நேற்று தாயகம் திரும்பினர்

(மன்னார்)

தமிழகத்திலிருந்து 10 இலங்கை அகதிகள் நேற்று தலைமன்னாரை வந்தடைந்தனர். நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் நேற்று அதிகாலை படகுகள் மூலம் மன்னாரை வந்தடைந்தனர். இவர்களைக கைதுசெய்த தலைமன்னார் பொலிஸார் மன்னார் மாவட்ட நீதிமன்றில் அவர்களை ஆஜர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சிவாஜிலிங்கம் எம்.பி. எச்சரிக்கை

(நமது நிருபர்)

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழ்ப்பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பை அரசு உருவாக்கும்வரை அரசால் மேற்கொள்ளப்படும் புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து நிகழ்வுகளையும் புறக்கணிப்போம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக் கட்டமைப்பில் கைச்சாத்திடுவதற்கு விடுதலைப் புலிகளை அழைக்கவுள்ளோம்

## வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசும், புலிகளும் இணைந்து சுனாமியினால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்களுக்கென உதவிகளை வழங்க ஏற்படுத்தப்படவிருக்கும் பொதுக்கட்டமைப்பிற்கான ஒப்பந்தத்திற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது நடைபெற்றுவருவதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

பி.பி.சி. உலகசேவையின் 'ஹாட்ஒவ்' நிகழ்ச்சியில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுனாமியின் பின்னர் குறுகிய காலத்தில் இவ்வாறான ஒப்பந்தத்தை மேற்கொள்ள முடியுமென்றால் அது பாரிய வெற்றியாகும் என கதிர்காமர் தெரிவித்தார். வெளிநாடுகளும், வெளிநாட்டு நிறுவனங்களும் உறுதியளித்த நிதியுதவிகள் இதுவரை அரசாங்கத்துக்கு கிடைக்கவில்லையென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான ஒப்பந்தம் மிகவிரைவில் கைச்சாத்திடப்படும்.

அதேவேளை விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல் குழுவினர் முக்கிய குறிக்கோளுடன் ஐரோப்பிய நாடுகளிற்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ளனர். இதன்மூலம் அவர்கள் சாதகமான முடிவு ஒன்றினை மேற்கொள்வர். நாமும் ஒப்பந்தத்தைத் தயாரிப்பதற்கான நடவடிக்கை (12 ஆம் பக்கம் பார்க்க)

## தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜனாதிபதியுடன் முக்கிய பேச்சு

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை தோட்ட உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்தி அமைச்சர் முத்துசிவலிங்கம், பிரதி அமைசசர் எம்.எஸ்.செல்லச்சாமி மற்றும் அமைச்சின் அதிகாரிகள் சந்தித்துப் பேசியுள்ளனர். நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இச் சந்திப்பில் மலையகப் பகுதிக்கான சேவைகளை அமைச்சினூடாக செய்வதற்கான அதிகாரம் முழுமையாக வழங்கப்படவேண்டும் என்று அமைச்சர் முத்துசிவலிங்கம் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார். மலையகப் பகுதிக்கான ஆசிரியர் நியமனம், மற்றும் எழுதுவினைஞர் நியமனம் உட்பட ஏனைய நியமனங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியம் குறித்தும் அமைச்சரும், பிரதி அமைச்சர் செல்லச்சாமியும் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியுள்ளனர். (ச)

## சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உயர்மட்ட மாநாடு நாளை

விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்குமிடையே பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உயர்மட்டக் குழுவினர் கூடி ஆராயவுள்ளனர். இது தொடர்பான உயர்மட்ட மாநாடு நாளை ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் நாளை ஜனாதிபதி மாளிகையில் ஒன்றுகூடவுள்ளனர். கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்தும் விரிவாக ஆராயப்படவுள்ளது. இதேவேளை ஜனாதிபதியின் பதவிக்காலம முடிவுறும் தறுவாயில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என் பது குறித்தும் முடிவெடுக்கப்படவுள்ளது. (ச-04)

## சர்வதேச மன்னிப்புச் சபை பிரதிநிதிகள் தமிழ்ச்செல்வன் குழுவினருடன் சந்திப்பு

ஐரோப்பிய நாடுகளில் பயணம் மேற்கொண்டுள்ள தமிழீழ அரசியல் விவகாரக் குழுவினருடன் சர்வதேச மன்னிப்புச்சபை மனித உரிமைகள் இயக்கப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினர்.

ஜெனீவாவில் தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவை சர்வதேச மன்னிப்புச் சபையின் நிர்வாகி திருமதி இன்கிரிட் மேசேஜ் சந்தித்து உரையாடினார்.

திருமதி இன்கிரிடிடம், ஆழிப்பேரலைக்குப் பின்னையகால தமிழீழ நிலைமைகள் குறித்து தமிழ்ச்செல்வன் விளக்கினார்.

அத்துடன் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின்படி இடப்பெயர்வுக்குள்ளான தமிழர்கள் இன்னமும் மீளக் குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்படவில்லை என்றும் அவர்கள் வதிவிடங்கள் உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இடப்பெயர்வுக்குள்ளாகி முகாம்களிலும (12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் தமிழரை விடுவிக்குமாறு அந்நாட்டு அரசு நிர்ப்பந்தித்ததா?

### சண்டே லீடர் செய்தியை மறுக்கிறார் பாலா

பிரிட்டனைச் சேர்ந்த தமிழர் ஒருவரை விடுதலைப்புலிகள் பாதுகாப்பாக விடுதலை செய்யவேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை பிரிட்டிஷ் அரசு நேரில் அழைத்து நிர்பந்தித்ததாக வெளியான செய்திகளை அவர் மறுத்துள்ளார்.

இது குறித்து தமிழ்நெட் இணையத் தளம்மூலம் அன்ரன் பாலசிங்கம் தனது விளக்கத்தைத் தெரிவித்துள்ளார். கொழும்பிலிருந்து வெளியாகும் 'சண்டே லீடர்' பத்திரிகையில் ஜெயதேவன் என்பவரை தமிழீழ விடுதலைப்புலிகள் கைதுசெய்து தடுத்துவைத்துள்ளதாகவும், அவரைப் பாதுகாப்பாக விடுதலை செய்யவேண்டும் என்று என்னை பிரிட்டிஷ் அரசு நிர்பந்தித்ததாக எழுதப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறான தகவல். எந்தச் சூழ்நிலையிலும் பிரிட்டிஷ் அதிகாரிகள் ஜெயதேவன், (12 ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவ பீட மாணவரின் பெற்றோர் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்காக அவர்களின் பெற்றோர் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக மருத்துவபீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக மருத்துவபீடத்தில் கல்விகற்கும் மாணவர்களின் பெற்றோருக்கும் மருத்துவபீடமாணவர் ஒனறியத்திற்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.

இச் சந்திப்பின்போது பல்கலைக்கழ நிர்வாகத்தின் கவனத்தை மாணவர் பக்கம் திருப்புவதற்காக பெற்றோரின் போராட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பாக கலந்துரையாடவுள்ளது.

இதேவேளை மாணவர்களின் பிரச்சினைகள் குறித்து யாழ்.பல்கலைக்கழ மருத்துவ (12 ஆம் பக்கம் பார்க்க)



# விரும்பியோ விரும்பாமலோ இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண இந்தியா ஒத்துழைக்க வேண்டும்!

## ஈழவேந்தன் எம்.பி.தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் இனச்சிக்கலை ஒட்டி எமது அணுகுமுறை நேர்மைக்குட்பட்டதாக அமைய வேண்டும். வெறுமனவே அறிவு நிலையில், ஆய்வு நிலையில் இச்சிக்கலை ஆய்வது எமக்கு பயனளிக்கப் போவதில்லை.

அத்துடன், இலங்கையில் உள்ள இரு இனக்குழுக்களும் தமது மொழி, பண்பாடு வாழ்வியல் முறை அனைத்தையும் முழு வடிவில் பேணிக் காக்க விரும்புகின்றார்கள்.இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், சேர்.பொன் இராமநாதனும், சேர்.பொன் அருணாசலமும் தமது இறுதிக் காலத்தில் ஏமாற்றத்திற்கு ஆளாகியே தமது வாழ்வை முடித்துக் கொண்டனர்.

எனினும் அவற்றின் விரிவை நான் இங்கு கூற விரும்பவில்லை.

இலங்கைத் தேசிய காங்கிரசை உருவாக்கிய சேர்.பொன் அருணாசலம் என்ன காரணத்தினால் தமிழர் அவையை உருவாக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார் என்பதை நாம் அறிதல் வேண்டும்.

டொனமூர் சீர்திருத்தங்களை இராமநாதன் எதிர்த்ததற்குரிய காரணிகள் யாவை? 'டொனமூர் எனின் இனிமேல் தமிழர் இல்லை' என்று ராமநாதன் ஏன் கூறினார்.

தமிழருக்கு போதிய பாதுகாப்பற்ற நிலையில் நாம் இச்சீர்திருத்தங்களை நாம் ஏற்போமாயின் வெறிகொண்ட கும்பலுக்கே ஆட்சியை ஒப்படைக்கும் நிலைக்கு ஆளாக்கப்படுவோம் என்று ஏன் கூறினார்.

அவருடைய ஆவதறிதலை - தீர்க்கதரிசனத்தை நாம் இப்போது அனுபவிக்கிறோம். தமிழரின் "உயிரையே புதைக்க வந்து விட்டார் என்று சோல்பரியின் அரசியல் யாப்பை ஜி.ஜி. பொன்னம்பலம் கண்டித்தார்.

பல்லினம், பல்மொழி வாழுகின்ற ஒரு நாட்டில் ஒற்றையாட்சி எமது தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வாக அமையமாட்டாது. பெரும்பான்மை, சிறுபான்மை என்ற கேள்விக்கே இடமில்லை.

காரணம் இந்நிலையை நாம் ஏற்போமாயின் எமது நிலைமை மேலும் மோசமடையும். கார்ணம் இலங்கை என்பது ஒரு நாடு அல்ல. இரு நாடுகளின் உள்ளடக்கம். தன்னுரிமையை"நிலை நாட்டலையே தமிழர்கள் நாடி நிற்கின்றனர்.

தமது தாயகக் கோட்பாட்டை ஏற்க வேண்டும் என்பதுவே தமிழரின் கோரிக்கை. பொருள் பொதிந்த இணைப்பாட்சியைத் தருவார்களாயின் தமிழர்கள் ஈழத்தைக் கைவிடுவதற்கு ஆயத்தமாவர்.

நாம் கருதுகின்ற இணைப்பாட்சி அமைப்பில் அதன் அதிகாரங்கள் தெட்டத்தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

அத்தோடு எந்நிலையிலும் மாநில அரசுகளை மைய அரசு கலைக்கின்ற நிலை இருக்கக் கூடாது.

எனினும் மைய அரசில் வெளியுறவு அலுவல்கள், பாதுகாப்புப் போன்ற அதிகாரங்கள் அனைத்தும் மாநில அரசுகளிடமே ஒப்படைக்கப்பட வேண்டும்.

இணைப்பாட்சி என்பது நாட்டை பிரிப்பதுவோ அல்லது நாட்டை சீர்குலைப்பதுவோ அல்ல. மாறாக அதிகாரங்களைப் பரவலாக்குவதற்கான ஒரு வழியாகும்.

அதேவேளையில் நாட்டினுடைய அடிப்படை ஒற்றுமை பேணப்பட வேண்டும். நாட்டின் அடிப்படை ஒற்றுமை காக்கப்படுகின்ற வேளையில் அந்நாட்டின் ஒவ்வொரு இனமும் தனது தனித்துவத்தைப் பேணி இயங்குவதற்கு உரிமை வழங்கப்பட வேண்டும்.

ஒற்றுமை என்பது ஒற்றையாட்சியல்ல. அதேவேளை இணைப்பாட்சி என்பது பிரிவினை அல்ல. இதை ஒட்டி நாம் தெளிவாய் இருப்போம்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக கண்டிய சிங்களவர்களும் தமிழர்களும் திட்டவட்டமான எல்லைப் பரப்பில் தமது மொழியை, பண்பாட்டை, தமது தனித்துவத்தை பேணிக்காத்து வந்திருக்கின்றார்கள் என்ற கருத்தினை முதலில் கூறியவர் தந்தை செல்வா அல்ல. மாறாக மறைந்த பண்டாரநாயக்கா தான் என்பது இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

பண்டாரநாயக்க மேலும் என்ன கூறுகின்றார் என்றால், இவ்விரு இனங்களும் ஒன்றாக மாற வேண்டுமென்று யார் கூறினாலும் அவர் பொறுப்பற்றவர் என்று பண்டாரநாயக்கா குற்றம் சாட்டுகின்றார்.

பண்டாரநாயக்கா தன் கூற்றின் முடிவில் இதை மிக்க தெளிவுபடுத்தியுள்ளார்.

நான் இறுதியாகக் கூற விரும்புகிறது என்னவென்றால் விரும்பியோ விரும்பாமலோ இந்த இனச்சிக்கலைத் தீர்க்க இந்தியா தனது பங்களிப்பைச் செய்தே ஆகவேண்டும். இந்தியா தனது பங்களிப்பைச் செய்கின்ற போது இந்தியாவில் பிரிக்க முடியாது பிணைந்திருக்கும் தமிழ் நாட்டின் நலன்களுக்கு ஊறுசெய்யாத முறையில் தான் இந்தியாவின் முடிவும் தீர்ப்பும் அமைய வேண்டும்.

இதேவேளை, எவரையும் மிஞ்சுகின்ற அளவிற்கு நான் சிங்களவர் மீது பற்றும் பாசமும் உடையவன். சிங்களவர்களை உண்மையில் எனது நண்பர்களாகக் கருதுகின்றேன்.

ஆனால், நாட்டின் அரசியல் அமைப்பே எமது முதலாவது எதிரி என நாம் கொள்கிறோம். ஒற்றையாட்சி அமைப்பில் தலைகள் தான் எண்ணப்படுகின்றன. அது இறுதியில் தலைகள் உடைக்கப்படுவதற்கு' வழிவகுக்கும்.

நாம் பல கசப்பான அனுபவங்களைப் பெற்ற நிலையில் இலங்கையில் எழுந்துள்ள இனச்சிக்கலுக்கு இணைப்பாட்சி ஒன்று தான் ஏற்ற தீர்வு என்று கருதுகின்றேன். இணைப்பாட்சியில் மோதல் தவிர்க்கப்பட்டு ஒத்த உரிமையுடன் கூடிவாழ முடியும் என்றுள்ளது.

(க)

## இராசி பலன்

23.03.2005
பங்குனி 10, புதன்கிழமை
திரியோதசி பின்னிரவு 1.37 மணிவரை
மகம் முன்னிரவு 09.33 மணிவரை
இராகுகாலம் 12.16 - 01.46 மணிவரை
சுபநேரம் 4.46 - 6.16 மணிவரை
சித்தாமிர்தம், பிரதோசவிரதம்.

| | |
|---|---|
| மேடம் | ஆரோக்கியக் குறைவு, பணக்குறைவு, காரிய இடையூறு, மனஸ்தாபம். |
| இடபம் | தன்னம்பிக்கைக் குறைவு, தனவிரயம், எதிர்பாராத நன்மை, புதிய விடயம். |
| மிதுனம் | நற்கீர்த்தி, சித்தசௌக்கியம், காரிய அனுகூலம், சகோதரர் உதவி. |
| கடகம் | போசன சுகக்குறைவு, மனோசங்கடம், பொருள்விரயம், வேலைச்சுமை. |
| சிங்கம் | வெகுமானம், சயனசுகம், மாதர் நட்பு, வாக்குமேன்மை. |
| கன்னி | கற்பனை மிகுதி, பிரயாண அலைச்சல், உறவினர் வெறுப்பு, தனவிரயம். |
| துலாம் | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, சயன சுகம், போசனசுகம். |
| விருச்சிகம் | பிறருக்கு உதவிசெய்தல், ஆரோக்கியம், பிரபுத்தனம், எதிர்பாராத நன்மை. |
| தனுசு | உத்தியோக பங்கம், தேசாந்திர வாசம், கட்டுப்பாடு, இடமாற்றம். |
| மகரம் | வாகன பயம், வீண் பிரச்சினை, அஜீரணக் கோளாறு, முயற்சி தாமதம். |
| கும்பம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, போசன சுகம், சயன சுகம், தனலாபம். |
| மீனம் | ஆரோக்கியம், மனமகிழ்ச்சி, தொழில் விருத்தி, சத்துருஜெயம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

—வளவன்

## குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த கடுமையான சட்டங்கள் உருவாக்கப்படும்

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த கடுமையான சட்டங்களை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக நீதியமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்திருக்கிறார்.

குற்றச் செயல்களைத் தடுப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் அதிகாரிகளுக்குக் கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்த அமைச்சர் இந்நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற குற்றவியல் வழக்கு ஒழுங்கு விதிகள் திருத்த சட்டமூலம் மீதான விவாதத்தின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

குற்றச் செயலில் ஈடுபடும் ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்த பின்னர் நடாத்தப்படும் விசாரணைகளின் போது அவரது இரத்த மாதிரியை பெற்றுக் கொள்ளும் வகையில் இச் சட்டமூலத்தில் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போதைய சட்டத்தின்படி சந்தேக நபரின் விருப்பின் பேரிலேயே இரத்த மாதிரியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் இவ்விவாதத்தில் கலந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இத்திருத்தச் சட்ட மூலத்திற்கு தமது கட்சி ஆதரவு வழங்குமெனத் தெரிவித்தார்.

அத்துடன், குற்றச் செயல்களைத் தடுக்கும் பொருட்டு துரித நடவடிக்கைகளை மேற்கொள்வது இன்றைய சமுதாயத் தேவை எனவும், நீதித்துறை சார்ந்த செயற்பாடுகளின் போது ஒருவரின் அடையாளத்தை உறுதிப்படுத்த நவீன தொழில் நுட்ப முறைகளைப் பயன்படுத்தும் அதிகாரத்தை குற்றத் தடுப்பு அதிகாரிகளுக்கு வழங்குவது சிறந்தது எனவும் ஜி.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்தார். (க-7)

## ஆபாசப் படம் பார்த்தோர் புங்குடுதீவில் நையப்புடைப்பு

(புங்குடுதீவு)


புங்குடுதீவு பகுதியில் குடிமனையற்ற வீட்டில் வைத்து ஆபாச படம் பார்த்த நால்வர் கலாச்சாரம் பேணும் குழுவினரால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், தொலைக்காட்சிப்பெட்டியும் டெக் மற்றும் கொப்பி என்பனவும் கலாச்சாரம் பேணும் குழுவினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

இவ்வாறு ஆபாசப்படம் பார்த்தோர் பாடசாலை செல்லும் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(ப-126)





வேலணை சரஸ்வதி வித்தியாலய மாணவிகளுக்கு வடமாநில இந்து மாமன்றத்தினரால் பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் பாடசாலை உபகரணங்களை வழங்கிய வடமாநில இந்துமா மன்ற அமைப்பாளர் உரையாற்றுவதை முதலாவது படத்திலும் மன்றத்தின் அமைப்பாளர் எஸ்.குணராசா மாணவனுக்கு பொருட்களை வழங்கும் காட்சியை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## வரம்

வரம் கொடுத்துவிட்டு மாட்டிக்கொண்டு முழிப்பது. எல்லா இடத்திலும் இருக்கும் போலிருக்கிறது. பத்மாசுரன் கதை தெரியுமல்லவா? அவன் ஒரு அரக்கன். முனிவர்களையெல்லாம் அடிக்கடி தொந்தரவு செய்து கொண்டிருந்தான். நாரதருக்கு இந்த விஷயம் தெரிந்தது. சும்மா இருப்பாரா? உடனே புறப்பட்டு வந்தார். பத்மாசுரனைப் பார்த்தார்." என்னப்பா? எப்படி இருக்கிறாய்?" என்று விசாரித்தார்.

'உம்மை மாதிரி சாதுவாக இருந்துவிட்டால் உலகில் ஒன்றும் தொந்தரவு இல்லை.என்னை மாதிரி இருப்பதால் ஏகப்பட்ட கஷ்டம்.எங்களை அழித்துவிட வேண்டும். என்றே எல்லோரும் நினைக்கின்றனர். எங்களுக்கு யாரும் மரியாதை கொடுப்பதில்லை! என்று குறைபட்டுக் கொண்டான் பத்மாசுரன்.

உடனே நாரதர் அதற்கு ஒரு வழி சென்னார். இதோ பாரப்பா இதற்கு ஏன் இப்படி கவலைப்படுகிறாய்? வரம் கொடுப்பதற்கு எப்போதும் தயாராக இருப்பவர் சிவன் அதனால் நீ அவரை நினைத்து தவம் செய்! உடனே அவர் வந்து விடுவார். "என்ன வரம் வேண்டும்" என்று கேட்பார் ஏதாவது ஒரு வரம் கேள் அதன்பின் உனக்கு மரியாதை அதிகமாகிவிடும் என்றார்.

"என்ன வரம்கேட்பது?" என்றான் அவன் எதிரிகளெல்லாம் உன்னைக்கண்டு பயப்படவேண்டும். அவ்வளவு தூரத்திற்கு ஏன்? உனக்கு வரம் கொடுத்த சிவனே உன்னைககண்டு பயப்படவேண்டும். அதுபோன்ற ஒரு வரம் கேள் என்றார் நாராதர் " எதுமாதிரி வரம் வாங்கினால எல்லோரும் பயப்படுவார்கள். என்று கேட்டான். அதாவது... உன் கையை யார் தலைமீது வைத்தாலும் அவர் உடனே எரிந்து சாம்பாலகி விடவேண்டும் அப்படி ஏதாவது ஒரு வரத்தை வாங்கிவிடு என்றார். "சரி" என்று கூறிவிட்டு உடனே புறப்பட்டுப் போனான் கடுமையாகத் தவம் இருந்தார். சிவபெருமான் வந்து முன்னாள் நின்றார். "பத்மாசுரா!உன் தவத்தை மெய்ச்சினேன் என்ன வரம் வேண்டும் கேள்" என்றார். "நான் யார் தலையில் கையை வைத்தாலும உடனே அவர் எரிந்து சாம்பாலாகிவிட வேண்டும்" என்றான். "சரி! அப்படியே ஆகட்டும்" என்று கூறி வரம்கொடுத்துவிட்டு அவர் போய்விட்டார்.

பத்மசுரன் மிகுந்த அலட்சியத்துடன் நடந்துவந்து கொண்டிருந்தான் வழியில் நாராதர் வந்து கொண்டிருந்தார். விசயத்தைச் சென்னான் "அது சரி அவர் உண்மையாகவே வரம் கொடுத்தாரா? அதை நீ சோதித்துப்பார்த்தாயா? என்று கேட்டார் "எப்படி சோதிப்பது? " என்று கோடடான் இது என்ன பெரிய விஷயம்? யார் தலை மீதாவது கைவைத்து பார்க்கவேண்டியது தானே! " என்றார். "அப்படி என்றால் நீங்கள் தான் கொஞ்சம் உதவி செய்ய வேண்டும் உங்கள் தலையை கொஞ்சம் காட்டுங்களேன் "இது என்ன வம்பாகிவிட்டது" என்று எடுத்தார். ஓட்டம் இருந்தாலும் போகிற போக்கில் ஒரு யோசனையை சொல்லி விட்டு ஓடினார். என்னை சாம்பலாக்கிவிட்டாய் எனறால் அதன் பின் உனக்கு யோசனை சொல்ல ஆள் இருககாது. அதனால் உனக்கு வரம் கொடுத்தவர் தலையிலேயே கை வைத்துப்பார் பலிக்காவிட்டால் அவரேயே பிடிக்கலாம் என்றார் "அதுவும் சரி தான்" என்று அவன் சிவனைத் தேடிப்புறப்பட்டான்.

நாராதர் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடி வந்து திருமாலிடம் விஷயத்தைச்சொன்னார் திருமால் சிவனிடம் ஓடினார். அங்கே அவரை பத்மாசுரன் துரத்திக்கொண்டிருந்தான. திருமால ஒரு திட்டம் போட்டார். அழகிய ஒரு பெணணாக மாறினார் மோகினி உருவம் பத்மாசுரன் பார்த்தான். அருகில் ஓடி வந்தான். "என்னைத் திருமணம் செய்து கொள்" என்றான் "சரி! அதற்கு முன் நீ போய் நன்கு குளித்து விட்டு எண்ணை பூசி சீவிக்கொண்டுவா" என்றது அந்த மோகினி பத்மாசுரன் குளிப்பதற்கு ஓடினான். ஆற்றில் இறங்கினான் தலையைத்தேய்ப்பதற்காக கையை தலையில் வைத்தான்.அவ்வளவு தான்! ஆள் காலி. வரம் பலித்துவிட்டது அவனே எரிந்து சாம்பலாகிவிட்டான். அப்பாட என்று எல்லோரும் நிம்மதியாக மூச்சுவிட ஆரம்பித்தார்கள். வரம் கொடுத்து விட்டு மாட்டிக்கொண்டால் இப்படியெல்லாம் செய்து தான் தப்பிக்க வேண்டியுள்ளது. இதற்காகத்தான் சொல்வது அவசரப்பட்டு வரம் கொடுப்பதும் தப்பு. வாக்குக்கொடுப்பதும் தப்பு. எப்போதும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அன்றைகது அப்படித்தான் சார் ஒருவர் என்னிடம் வந்தார். "மனித நேயம் என்றால் என்ன என்று கோட்டார் 'ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருப்பது" என்றேன் "அது மிகவும் அவசியமா" என்றார். "ஆமாம்" என்றேன் "அப்படி என்றால் 50 ரூபா கை மாற்று தாருங்கள் " என்று வாங்கிக் கொண்டு போய்விட்டார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவராக அனந்த பாலகிட்ணர் ஏகமனதாக தெரிவு

(கொழும்பு)

இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவராக லேக்கவுஸ் நிறுவனத்தின் மூத்த ஊடகவியலாளர் அனந்த பாலகிட்ணர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி அமரர் பாலகிட்ணரின் மகனாவார். கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை கொழும்பு ரன்முத்து ஹோட்டலில் நடைபெற்ற ஒன்றியத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் இந்த தெரிவு இடம்பெற்றது.

செயலாளராக ஞாயிறு தினக்குரல் ஆசிரியர் ஆர்பாரதியும், பொருளாளராக வீரகேசரி நிறுவனத்தின் பத்திரிகையாளர் எஸ்.சிறீகஜனும் தெரிவு செய்யப்பட்டனர்.

கடந்த காலத்தில் உயிரிழந்த பத்திரிகையாளர்களுக்கும் ஆழிப்பேரலையில் மரணமான அனைத்து மக்களுக்குமாக இரு நிமிட மௌன அஞ்சலியுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

சுட்டுக்கொல்லப்பட்ட பத்திரிகையாளர்களான நிமலராஜன், மற்றும் நடேசன் ஆகியோரின் விசாரணைகள் தொடர்பாக இதுவரை எவருமே கைது செய்யப்படவில்லை. இவ்விடயத்தில் அரசின் அசமந்தபோக்கு குறித்து இந்த கூட்டத்தில் பலராலும் விசனம் தெரிவிக்கப்பட்டது.

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களும் அச்சுறுத்தல்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை அரசு கவனத்தில் எடுத்து ஊடகவியலாளர்களை பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

உலக வங்கியின் உதவியுடன் ஊடகவியலாளர்களுக்கு கனணி பயிற்சித்திட்டம் அறிமுகம் செய்யப்பட்ட போதிலும், இதில் தமிழ் ஊடகவியலாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படாமை குறித்து செயலாளர் தனது வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டு கவலை வெளியிட்டிருந்தார்.

தமிழ் ஊடகத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்காலத்தில் அவர்களுடைய தொழிலுடன் சம்பந்தப்பட்ட விடயத்தில் கவனம் செலுத்தி அவர்களுடைய முன்னேற்றத்திற்கு பாடுபடப்போவதாக புதிய தலைவர் தனது உரையில் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மலையகம் உட்பட கொழும்பை மையமாகக்கொண்ட தமிழ் ஊடகவியலாளர்கள் பலரும் இதில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முனனர் கொழும்பு பல்கலைக்கழகத்தைச சேர்ந்த அரசியல் விரிவுரையாளர் கலாநிதி கீத பொன்கலன் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியபோது, இந்த நாட்டில் மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் வரக்கூடிய கால கட்டம் நெருக்கிவருகின்றது.

பெரும் அரசியல் நெருக்கடியினை தற்போதைய அரசு எதிர்நோக்கியுள்ளது எனக் குறிப்பிட்டார்.

அரச சார்பற்ற நிறுவனங்களை தற்போதைய ஆட்சி பீடத்தில் உள்ள பங்காளி கட்சியான ஜே.பி. வி. கடுமையாக விமர்சித்து வருவது அவர்களுடைய வங்குரோதது நிலையை எடுத்து காட்டுகின்றது. என சுகவாழ்வு அமைப்பின் தலைவரும் பிரபல அரசியல் விமர்சகருமான கலாநிதி குமார் ரூபசிங்க உரையாற்றும் போது கூறினார்.

விடுதலைப் புலிகளுடன் ஒரு இணக்கப்பாட்டு அரசு வரவேண்டும் இல்லாவிட்டால் பொருளாதாரம் பாதாளத்துக்குச் சென்றுவிடும் பணவீக்கம் எற்படும் ஆழிப்பேரலை நிதிக்கு வெளிநாட்டியிலிருந்து பெருமளவு நிதி வந்துள்ளது.

ஒரு சதம் கூட ஆழிப்பேரலை நிதி வந்து சேர வில்லை என ஜனாதிபதி கூறியுள்ளமை எங்களுக்கு பெரும் ஆச்சரியத்தை தந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.(7)

## தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஒப்பந்தமா? புத்தபிக்குகள் சாகும்வரை உண்ணாவிரதம்

(திருகோணமலை)

திருகோணமலையில் உண்ணா விரதத்தில் ஈடுபட்டுள்ள பௌத்த பிக்குகளில் ஒருவர் நேற்று முதல் சாகும் வரையான உண்ணா விரதத்தை ஆரம்பித்துள்ளார்.

வட-கிழக்குப்பிரதேசத்தை மீள கட்டியெழுப்புவதற்கு தேவையான பொதுக்கட்டமைப்பு தொடர்பான ஒப்பந்தத்தினை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் செய்வதனை எதிர்த்தும் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு நிலையான வீடுகளை நிர்மாணித்துத் தரும்படி கோரியும் பௌத்தபிக்குகள் உண்ணா விரதத்தினை ஆரம்பித்துள்ளனர்.

சாகும் வரையிலான உண்ணாவிரதத்தினை ஆரம்பிப்பதற்கு முன் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத்தெரிவித்த கந்தளகமுவே நலவரதனதேரர் எமது போராட்டம் பல வாரங்களாக இடம் பெற்றுவருகின்ற போதிலும் அரச தரப்பினர் முற்றுமுழுதாக எமது கோரிக்கையினை உதாசீனப்படுத்தி வருகின்றனர். எம்முடன் பேச்சுவார்த்தைகளை நடாத்த அரசின் பிரதிநிதிகள் எந்தவிதமான முயற்சியிலும் ஈடுபடவில்லை.

ஆகவே இந்தப்போராட்டத்தினை சாகும்வரையிலான போராட்டமாக மாற்றியிருக்கின்றோம் இந்தப்போராட்டத்தில் உயிர்போகும் பட்சத்திலும் தான் கவலைப்படப்போவதில்லை என்று அவர் தெரிவித்தார். (து-4)

## இணைந்த சேவையில் சிற்றூழியர்களை சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சை

அரச சேவையில் உள்ள சிற்றூழியர்களை பொது எழுதுநர் சேவை மற்றும் தட்டெழுத்தாளர் சேவையின் II ஆ பிரிவிற்கு நியமனம் செய்வதற்கான விண்ணப்பங்கள் அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் இணைந்த சேவைகள் பிரிவினால் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் 8.4.2005ஆம் திகதிக்கு முன்பதாக மாகாண அரச சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.3 வருட கால திருப்தியான சேவையாற்றிய ஊழியர்கள் பரீட்சைக்குத் தோற்ற தகுதியுடையவர்கள் ஆவார்கள் விண்ணப்பப்பத்திரம் மாதிரியினை 4.3.2005ஆம் திகதி வர்த்தக மாணியில் பிரசுரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(து-47)

## மங்களம் மாஸ்ரர் கொழும்புக்கு மாற்றம்

(கொழும்பு)

பொலன்னறுவை மாவட்டம் வெலிக்கந்தை பிரதேசத்திலுள்ள தீவுச்சேனையில் உள்ள கருணா குழுவினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் காயமடைந்த மூவரில் ஒருவரான மங்களம் மாஸ்ரர் எனப்படும் ஜயாத்துரை சதீஸ் என்பவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பலத்த பாதுகாப்புடன் பொலன்னறுவை வைத்தியசாலையிலிருந்து அம்புலன்ஸ் வண்டி மூலமநேற்று முன்தினம் மாலை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டார்.ஏனையவர்களான சின்னமுத்து ரவீந்திரராஜா மற்றும் கந்தசாமி தேவராஜா ஆகியோர் தொடர்ந்தும் பொலன்னறுவை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட அணியினரைத் தவிர வேறு எவரும் இவர்களை பார்க்க முடியாதவாறு பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது.பொலன்னறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சமயம் மங்களம் மாஸ்டரை புகைப்படம் எடுப்பதற்கு ஊடகவியலாளர்கள் முயறசித்தபோதிலும் அவர் தனது முகத்தைக் காண்பிக்க மறுத்துவிட்டார்.

இதேவேளை இலங்கைப் போர் நிறுத்த கண்காணிப்புக் குழு பிரதிநிதிகள் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக அவர்கள் எத்தகைய கருத்துக்களையும் செய்தியாளர்களிடம் வெளியிட மறுத்து விட்டமை குறிப்பிடத்தக்கது. (7)

## குடிநீர் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநாகர சபையினால் சட்ட நாதர் கோயிலடி மற்றும் பொம்மை வெளிப்பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் வேலைத்திட்டம் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. இந்நீர் விநியோகத்திட்டத்தை வைபவரீதியாக இன்று யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் திறந்து வைக்கின்றார். (19.7)

## புலிகளுக்கு பாதுகாப்பு வழங்க அரச படையினர் மறுப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிற்கு தெற்கேயிருந்து வாழைச்சேனையூடாக வாகரைப்பகுதிக்குச் செல்வதற்கு இராணுவப் பாதுகாப்பு வழங்குமாறு விடுதலைப் புலிகள் விடுத்த கோரிக்கையை படையினர் நிராகரித்துளளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன், மட்டக்களப்பு தெற்கிலிருந்து வாகரைப் பகுதியிலுள்ள வாழைச்சேனை மற்றும் கஜுவத்தை ஊடாக புலிகளின் மட்டக்களப்பு - அம் பாறை விஷேட தளபதி கேணல் பானு தலைமையிலான 26 பேர் கொண்ட குழுவினர் சென்றனர்.

இதற்கான பாதுகாப்பை வழங்குமாறு புலிகளின் சமாதான செயலகம் நோர்வே அனுசரணையாளர்களூடாக அரச சமாதான செயலகத்திடம் கோரிக்கை விடுதிருந்தது.

எனினும் புலிகளின் இந்தக் குழுவில் கேணல் பானுவும செல்வதால் அந்தக் குழு அரச நடவடிக்கைக்காகச செல்லாது இராணுவ முயற்சிகளுக்காகவே செல்வதாகக் கூறி படையினர் புலிகளின் கோரிக்கையை நிராகரித்து விட்டனர்.

இதற்கான ஆலோசனையையும் சிபாரிசையும், அரச சமாதான செயலகம்,கூட்டுப்படைத் தலைமையகத்திற்கு செய்ததின் அடிப்படையிலேயே புலிகளின் இந்தப் பயணத்திற்கான பாதுகாப்பை வழங்க படைத்தரப்பு மறுத்துவிட்டது.

புலிகளின் பயணங்களுக்கு இராணுவத்தினர் பாதுகாப்பு வழங்க வேண்டுமென போர்நிறுத்த உடன்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அதனை மறுக்கும் அதிகாரமும் அரச தரப்பிற்கிருப்பதாக படைததரப்பினர் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## பாடசாலைகளில் தங்கியிருப்போர் மே இறுதிக்குள் வெளியேற்றப்படுவர்

(கொழும்பு)

சுனாமிப்பேரலையால் பாதிக்கப்பட்டு தற்போது பாடசாலைகள், நலன்புரி நிலையங்கள் மற்றும் கூடாரங்களில் தங்கியிருக்கும் மக்கள் எதிர்வரும் மே மாத இறுதிக்குள் அங்கிருந்து வெளியேற்றப்படுவார்கள். என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திலக் ரணவிராஜா அறிவித்துள்ளார்.

இவர்களுக்கென 30 ஆயிரம் தற்காலிக வீடுகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவற்றில் சுமார் 10 ஆயிரம் வீடுகள் தமிழ் - சிங்களப் புத்தாண்டு சமயத்தில் மக்களிடம் கையளிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அம்பாறை, மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, காலி, மாத்தறை திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கம்பஹா களுத்துறை, கொழும்பு மாவட்டங்களில் இவ்வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

ஒரு வீட்டை நிர்மாணிக்க 40 ஆயிரம் ரூபா செலவாவதாகவும் திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார்.(ச)

# அதிகாரத்தில் அமர்வதே ஜனாதிபதியின் இலட்சியம்

## புதிய ஜனநாயக கட்சித்தலைவர் சி.கா. செந்திவேல்

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாத ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் தொடர்ந்தும் ஆட்சி அதிகாரத்தின் முதன்மை இடத்தில் எவ்வாறு அமர்ந்துகொள்வது என்பதிலேயே முழு அக்கறை செலுத்தி அதற்கான வழிவகைகளைத் தேடுவதிலேயே முனைப்பாக நிற்கின்றார்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் புதிய ஜனநாயக கட்சியின் செயலாளர் சி.கா.செந்திவேல்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற அரசியல் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

சுனாமி ஏற்படுத்திய பேரழிவில் இருந்து வடக்கு- கிழக்கு மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கக்கூடிய பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது பற்றி பேசப்படவில்லை. கைவிடப்பட்ட தேசிய இனப் பிரச்சினைக்கான இடைக்கால நிர்வாகம் பற்றியும் எவ்வித அக்கறையும் காட்டப்படவில்லை.

எல்லாவற்றிலும் இழுத்தடிப்பும் முன்னுக்குப் பின் முரணான பேச்சுமே ஆளும் தரப்பிலிருந்து வந்து கொண்டிருக்கிறது.

சுனாமிப் பேரழிவுக்குள்ளான வடக்கு- கிழக்கு புனரமைப்பு புனர்வாழ்வுக்கான பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதை ஜனாதிபதியோ அரசாங்கமோ முழு மனதோடு விரும்பவில்லை. ஏனெனில் யுத்தத்தால் ஏற்கனவே அழிவுற்ற வடக்கு- கிழக்கு மக்களும் மறுவாழ்வு பெற்றுவிடுவார்கள்; பலமடைந்து கொள்வார்கள்; அதன்மூலம் புலிகள் இயக்கமும் பயனடைந்து விடும் என்ற பேரினவாத அச்சமே இதற்குக் காரணமாகும்.

அதேவேளை உதவி வழங்கும் நாடுகளைத் திருப்திப்படுததி சுனாமி உதவிக் கட்டமைப்பைக்கொண்டு வர இருப்பதாகக் கூறிக்கொண்டே காலததைக் கடத்தி வருகிறார் ஜனாதிபதி.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எதிர்த்தரப்பில் இருந்து வரும் ஐக்கிய தேசியக் கட்சி தனது அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரத்தை முடுக்கிக்கொள்கிறது.

ஜே.வி.பி தற்போதைய பாராளுமன்ற ஆசனங்களைப் பெருக்கிக் கொள்ளும் வகையில் பேரினவாதக் கூச்சலைக் கிளப்பி வருகிறது என்றார். (க)


தாய்மார்களே மறந்து விட்டீர்களா?

வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், நண்பர்கள், உறவினர்களுக்கு

பிறக்கப்போகும் புதுவருடத்தை முன்னிட்டு அவர்களுக்கு அனுப்பவேண்டிய உடை, உ வு, அலங்காரப் பொருட்கள் அத்துடன் கடிதங்கள், வீடியோ நாடாக்கள், அல்பங்கள் ஆகியவற்றை உலகின் எந்த நாட்டிற்கும் குறைந்த கட்டணத்தில் விரைவாக எம்மால் பொதி செய்து அனுப்பி ர்கப்படும்.

கட்டண விபரம்

| | |
|---|---|
| பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், இத்தாலி, கொலண்ட் | 1KG - 750/= |
| கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, லண்டன் | 1KG - 1000/= |

தொடர்புகட்கு:-

RAINBOW TRAVEL &TOURS

32/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(அபிநயா நகைமாடத்துக்கு மேல்)

தொலைபேசி - 2223918, 0777 328219

குறிப்பு:- எமது ஸ்தாபனம் கொழும்பை தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்குகிறது.

(எ)


# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மாவையாதீனம் உட்பிரகார விக்னேஸ்வரர் திருக்கோவில் கும்பாபிஷேகம் எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை இடம்பெறவுள்ளது. (ற)

# சுகவாழ்வு நிலையத்தின் மகளிர் தின நிகழ்வு






சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சுகவாழ்வு நிலையத்தினால் கடந்த சனிக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் மகளிர் தின நிகழ்வு நடாத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும், சிறப்பு விருநதினர்களாக கலாநிதி மனோன மணி சண்முகதாஸ், உதவிக் கல்விப்பணிப்பாளர் கோகிலா மகேந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். மேலும், இந்நிகழ்வில் சுகவாழ்வு நிலையத் தலைவர் வண பிதா டேமியனும் கலந்துகொண்டார்.

இறுதியில் மகளிர் தினத்ததை முன்னிட்டு சுகவாழ்வு நிலையத்தினரால் பாடசாலை மாணவரிடையே நடாத்தப்பட்ட சித்திரப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (ற-19)

# கல்லுண்டாயில் யாழ்.மாநகர சபையால் நிலமீட்சித் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையினால் நில மீட்சித் திட்டமொன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கென யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபர் செ.பத்மநாதனால கல்லுண்டாய் வெளியில் உள்ள 50 ஏக்கர் காணி யாழ்மாநகரசபைக்கு வழங்கப்பட்டது.

இவ் 50 ஏக்கர் காணி பயிர்ச் செய்கைக்கோ அன்றி குடியேற்றத்திற்கோ பயன்படாத நிலையில் இருந்தது.

இந்நிலப்பரப்பே நில மீட்சித் திட்டத்தின் மூலம் பாவனைக்குரிய நிலப் பிரதேசமாக மாற்றப்படவுள்ளது.

அதாவது இப்பகுதியில் உள்ள மேல் மண்ணை அகற்றிவிட்டு ஆறு இஞ்சிவரை நிலத்தை வெட்டி அடியில் உக்கக்கூடிய குப்பைகளைக் கொட்டி பின் குப்பைகள் உக்குவதற்கான ஒருவகை மருந்து இட்டு பின்னர் வேறு இடங்களில் இருந்து பெறப்பட்ட தரமான நல்ல மண்ணை அதன் மேல் இட்டு பாவனைக்கு ஏற்ற வகையில் பயனுள்ள நிலமாக மாற்றவதே இந் நிலமீட்சித் திட்டமாகும்.

தற்போது குளங்களை ஆழமாக்கும் வேலை நடைபெற்று வருவதனால், அதன்மூலம் கிடைக்கும் மண்ணும் இந் நிலமீட்சித் திட்டத்திற்குப் பயன்படுத்தப்படவுள்ளது.

மிக விரைவில் இத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-19)

# சுட்டுக்கொலை

(குவைத்)

இருபத்தியாறு வயதான இலங்கை இளைஞரொருவர் குவைத் ஜாமூக் நகரில் இனந்தெரியாத நபரொருவரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அவரது மார்பில் துப்பாக்கிச் சூடு நடாத்தப்பட்டுளளதாக அறிவிககப்படுகிறது. உயிரிழந்தவர் குவைத்தைச சேர்ந்த இலங்கைப் பிரமுகர் ஒருவரின் வாகனச் சாரதியாகப் பணி புரிந்து வந்துள்ளார்.

இவருக்கும் அந்த வீட்டுப் பணிப்பெண்ணுக்கும் அப்பணிப்பெணணின் காதலனுக்கும் இடையிலான காதல் விவகாரமே இப்படுகொலைக்கு காரணமென குவைத் ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஆயினும் அவர்களது பெயர் விபரங்கள் அப்பத்திரிகையில் வெளியிடப்படவில்லை. (க-7)

# நியமனம்

(பொன்னாலை)

யாழ்போதனா வைத்தியசாலை பாலியல் நோய்த் தடுப்புச் சிகிச்சைப் பிரிவுக்கு பாலியல் நோய்கள் சிகிச்சை நிபுணர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பிரிவு நீண்டகாலமாக நிபுணத்துவ வைத்தியர் ஒருவர் இல்லாத நிலையில் இயங்கி வந்தது. தற்போது இக்குறைபாடு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மத்திய பாலியல் நோய்கள் தடுப்புச் சிகிச்சைப் பிரிவில் வைத்திய நிபுணராகப் பணி புரிந்த டாக்டர் திருமதி பிரியதர்சினி தயாபரன் என்பவரே யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 14 ஆம் திகதி முதல் யாழ்.போதனா வைத்தியசாலை பாலியல் நோய்கள் சிகிச்சைப் பிரிவில் தனது பணியினைப் பொறுப்பேற்றுள்ளார். (க-49)

# சுனாமியால் பாதிப்புற்றோருக்கு ஜூன் வரை நிவாரணம் வழங்கப்படும்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இவ்வருடம், ஜூன் மாதம் வரை அத்தியாவசிய உணவுப்பொருட்களை உலக உணவுத்திட்ட நிறுவனம் வழங்கவுள்ளது.

இந்த உணவுப் பொருட்கள் மாவட்ட செயலகங்களினால் பரிசலிக்கபட்டு கூட்டுறவுச் சங்கங்களினால் விநியோகிக்கப்படும்.

உலக உணவுத் திட்டப் பிரிவினர் மதிப்பீடுகளை மேற்கொண்டு, பாதிக்கப்பட்டவர்களை இனங்கண்டு அவர்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்க நடவடிக்கை எடுக்குமென நிவாரண, புனர்நிர்மாண, புனரமைப்பு அமைச்சின் செயலாளர் எம்.எஸ். ஜயசிங்க தெரிவித்துள்ளார். (க-7)

# தோட்டத் தொழிலாளர்களுக்கும் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்

## தொழிலாளர் ஐக்கிய முன்னணி கோரிக்கை

(கொழும்பு)

தனியார் துறை ஊழியர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுக்க நடாளுமன்றத்தில் விசேட சட்டமூலம் ஒன்றை சமர்ப்பிக்கபபோவதாக தொழில் அமைச்சர் அதாவுட செனிவிரத்தின தெரிவிததிருப்பதானது வரவேற்கத்தக்கது என தொழிலாளர் ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.

எனினும், தோட்டத் தொழிலாளர்களும் தனியார்துறை ஊழியர்கள் என்ற வகையில் அவர்களுக்கும இந்த சம்பளங்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கூட்டு ஒப்பந்ததததை காரணம் காட்டி இதனைத் தட்டிக் கழிக்கக்கூடாது என்றும் தொழில் அமைச்சரிடம் தாம் வலியுறுத்தியுள்ளதாக கட்சியின் பொதுச்செயலாளர் சதாசிவம் தெரிவித்தார்.

இந்தநிலையில், கூட்டு ஒப்பந்தத்தையோ வேறு எந்தக் காரணங்களையோ கோரி இவர்களுக்கான சம்பள உயர்வு மறுக்கப்பட்டால் மலையகம் தழுவிய போராட்டத்திற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (ற-9)

# மக்கள் குறைகேள் அரங்கு

## மனிதாபிமான வேண்டுகோள்!

வினைத்திறன் அற்ற இலஙகை அரசின் நிர்வாகம் காரணமாக அவசரக் கொடுப்பனவுப பணிகள் கூட உடனடியாக மக்களை எட்ட முடியாதநிலை காணப்படுகின்றமை இன்று உலகறிந்த விடயம். இந் நிர்வாகத்தின் அக்கறையற்ற போக்கினால் பல மனித உரிமை மீறல் நிகழ்வுகள் நிகழ்வதை அறிந்து கொள்ளமுடிவதில்லை. பலரும் இதே அரச சேவையில் தம்மை அர்ப்பணித்துச் சேவை செய்து இன்று தள்ளாத வயதில் ஓய்வ,தியம் பெறும ஒரு தொகுதி ஓய்வூதியர்களின் பரிதாப நிலையை இப்பகுதியினூடாக எடுத்துக் கூறுவதன் மூலமாவது அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இவ் விடயத்தை வெளிச்சத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

ஓய்வூதியர்களுக்கு நீண்டகாலத்தின் பின்னர் அண்மையில் ஓய்வூதிய மீளாய்வு செய்யப்பட்டு ஓய்வூதியம் மாற்றியமைக்கப்பட்டது. பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு (Trained Teacherrs) இவ ஓய்வூதிய மாற்றத்திற்கு அவர்களது பயிற்சிச் சான்றிதழ் (Training College Certificate) கோரப்பட்டது. ஆனால் 50 வருடங்களுககு முன் பெறற சானறிதழை பல வயோதிப ஆசிரியர்கள் எமது தேசத்தில் அடுத்தடுத்து இடம்பெற்ற இன்னல்களின் போது இழந்துவிட்டார்கள்.

இந்நிலையில் பிரதேச செயலகங்களை அணுகியபோது அவர்கள சேவை செய்த திணைக்களங்களில் அதன் பிரதியைப் பெற்றுத்தரும்படி அறிவுறுத்தப்பட்டது. அதன் பிரகாரம் யாழ். கல்வித் திணைக்களத்தின் பதிவுகள் அறைக்கு (Record Room) சென்று சுயவிபரக கோவைகளைப் பலத்த தூசிகளின் மத்தியிலும் சிரமத்தின் மத்தியிலும தேடி எடுத்தபோது அவற்றுள் அப்பிரதிகள் காணப்படவில்லை. பதிலாக வேறு சில ஆவணங்களின் பிரதிகள் கொடுக்கப்பட்டன. அவற்றைப் பிரதேச செயலகங்களில் ஒப்படைத்தபோதும் பயிற்சி சான்றிதழ் இன்றி உடனடியாக அதனை வழங்கமுடியாது எனவும் அதற்கு மாற்று நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளவேண்டியுள்ளது எனவும் பதிலளிக்கப்பட்டது.

பயிற்சி பெற்ற ஆசிரியர் என்பதற்கு ஆதாரமாக அச்சான்றிதழ் தேவைப்படுகின்றது எனவும் கூறப்பட்டது அவ்வாறாயின இதுவரை காலமும் எதன் அடிப்படையில் ஓயவூதியம் வழங்கப்படுகின்றது என்பது புரியாத புதிராக உள்ளது.

இதுதொடர்பாக பருத்தித்துறைப பிரதேச செயலகக் கணக்காளரிடம் கேடட போது, இதற்காக குழு ஒன்றை ஒழுங்கமைத்து தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும் எனவும் இதற்காகத் தான் வடமராட்சிக் கல்வி வலயத்தில் இருந்து ஒருவரை இக்குழுவிற்குத் தரும்படி கேட்டிருந்ததாகவும ஆனால் அவர்கள் அதுவிடயத்தில் அக்கறை காட்டாமையால் வேறு திணைக்களங்களில் இருந்து பொருத்தமானவர்களைக் கேட்கப் போவதாகவும் கூறியுள்ளார். இச்செயற்கிரமம் நடந்துமுடிந்து புதிய ஓய்வூதியமும் நிலுவையும் ஓய்வூதியர்களது கைகளுக்கு கிடைக்கு முன்னர் பல ஓய்வூதியர்கள் மரணமடைந்துவிடக்கூடிய பரிதாப நிலையே காணப்படுகிறது.

எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் சமூகத்தின மீது அக்கறை கொண்ட அமைப்புக்களும் யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் உடனடியாக கவனம் செலுத்தி இம்மூத்த தலைமுறைக்கு அவர்களது இறுதிக்காலத்தில் அவர்களுக்குரிய நியாயமான கொடுப்பனவுகள உரிய நேரத்தில் கிடைக்க வழிவகுப்பார்களா?

பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்கள் சார்பில்
தி.சுபாகரன், பொலிகண்டி.

# சிலுவையில் தன்னையே கையளித்து அர்ப்பணமாகும்

# இயேசு தரும் செய்தி என்ன?

## சிலுவை மரணத்தில் நீங்காத நினைவுகள்

“என் உயிரை என்னிடமிருந்து யாரும் பறித்துக் கொள்வதில்லை. நானாகவே அதைக் கொடுக்கிறேன். உயிரைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு. அதை மீண்டும் பெற்றுக் கொள்




ளவும் அதிகாரம் உண்டு. என் தந்தையின் கட்டளைப்படியே நான் இப்படிச் செய்கி றேன்” (யோவா 10:18) என மொழிந்த இயேசு சிலுவையைத் தாமே சுமந்து கொண்டு “மண்டை ஓட்டு இடம்” என்னுமிடத்துக்குச் சென்றார்.

அங்கே அவர்கள் இயேசுவையும் வேறு இருவரையும் சிலுவையில் அறைந்தார்கள் (யோவா 19:18-18). “நசரேத்தூர் இயேசு யூதர்களின் அரசன்” என்பது இயேசுவைச் சிலுவையில் அறைந்தவர்களின் குற்ற அறிக்கை. ஆனால் யூதரின் தலைமைக் குருக்கள் இவ்வறிக்கையை நிராகரிக்கின்றார். ஆனால் பிலாத்து “நான் எழுதியது எழுதியதே” எனக் கூறி இயேசுவே யூதர்களின் அரசன் என்பதை மீண்டும் அறிக்கையிடுகின்றான் (யோவா 19:19-20).

சிலுவையில் தொங்கும் இயேசுவே யூதர்களின் அரசன். அது மட்டுமல்ல அவரே அவர்களுக்காக தன்னையே அர்ப்பணமாக்கும் குருவும் ஆகின்றார்.

“அவர்கள் உண்மையினால் உமக்கு உரியவர் ஆகும்படி அவர்களுக்காக என்னையே உமக்கு அர்ப்பணமாக்குகிறேன்” (யோவா 17:19) எனும் இயேசுவின் அர்ப்பண வார்த்தைகள் இதனை நமக்கு உறுதிசெய்கின்றன. ஆக இயேசுவின் சிலுவைச்சாவு அவரது முழுமையான கையளிப்பும் அர்ப்பணமுமாகும்.

**பிதாவே அவர்களை மன்னியும்**

**(லூக் 23:33-34)**

கபாலஸ்தலம் என்று சொல்லப்பட்ட இடத்தில் இயேசுவையும் அவருடைய வலதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும் அவருடைய இடது பக்கத்தில் ஒரு குற்றவாளியையும் சிலுவைகளில் அறைந்தார்கள்.

அப்பொழுது இயேசு “பிதாவே இவர்களை மன்னியும்! தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்” என்றார். அவருடைய வஸ்திரங்களை அவர்கள் பங்கீட்டு சீட்டுப் போட்டார்கள். (லூக் 23:33-34)

மன்னிப்பது இலகுவானதல்ல ஆனால் இறைவனில் நம்பிக்கை வைத்து எம்மை முழுமையாக அர்ப்பணிப்போம்.

**‘ஆண்டவரே அடியேனை நினைத்தருளும்’ [லூக் 23:29-43]**

அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன் நீ கிறிஸ்துவானால் உன்னையும், எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான்.

மற்றவன் அவனை நோக்கி, நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயன்படுகிறதில்லையோ, நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம். நாம் நடப்பதற்கேற்பவே தக்க பலனை அடைகின்றோம். இவரோ தகாதவற்றையும் நடக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு இயேசுவை நோக்கி, ஆண்டவரே நீர் உம்முடைய இராஜ்ஜியத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்.

இயேசு அவனை நோக்கி “இன்றைக்கு நீ என்னுடனே கூட பரகதியில் இருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன்” என்றார். (லூக் 23:29-43)

தவறுகளை ஏற்றுக்கொண்டு, மனம் வருந்தி எம்மை அவரிடம் அர்ப்பணித்து. நினைவு கூரும்படி வேண்டுதல் செய்வோம்.

**‘அம்மா இவரே உம் மகன்…’**

**[யோவான் 19:25-26]**

இயேசுவின் தாயும், அவரது அன்புச் சீடரும் அவருடைய தாயின் சகோதரி கிலேயோப்பா மரியாளும், மாதலேனா மரியாளும் சிலுவையின் அடியில் நின்றார்கள். இயேசு அவர்களைக் கண்டு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீடனையும் கண்டு, தம்முடையதாயை நோக்கி “ஸ்திரியே அதோ உன் மகன்” என்றார்.

பின்பு அந்த சீடனை நோக்கி “அதோ உன்தாய்” என்றான். அந்நேரம் முதல் அந்தச் சீடன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டார். (யோவான் 19:25-27) மரியாள் வழியாக மீட்பு பெறும் வகை யில் அன்னையிடம் தஞ்சம் கோருவோம்.

**‘என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்’ [மார்க் 15:35-36]**

ஆறாம் மணி நேரம் முதல் ஒன்பதாம் மணிநேரம் வரை பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று.

ஒன்பதாம் மணிநேரத்தில் இயேசு ‘ஏலோ யீ! ஏலோ யீ லாமா சபத்தானி’ என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார். ‘அதற்கு என் தேவனே என்தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்’ என்று அர்த்தமாம்.

பல தடவைகளில் தோல்வியால் துவண்டு போய் விடுவதுண்டு, மீட்பிற்கான தியாகத்தை உணர்ந்து நம்பிக்கையோடு வாழ்க்கையைத் தொடருவோம்.

**‘நான் தாகமாயிருக்கின்றேன்’**

**[யோவான் 19:28]**

அதன் பின்பு எல்லாம் நிறைவேறிற்று என்பதை அறிந்த இயேசு, தேவ வாக்கியம் நிறைவேற்றத் தக்கதாக “தாகமாயிருக்கிறது” என்றார்.

அங்கே ஒரு பாத்திரம் நிறையக் காடி இருந்தது. அதில் கடற்காளானைத் தோய்த்து ஈசோப்பில் பொருத்தி, அதை உயர்த்தி அவரது வாயில் வைத்தார்கள்.

இறைவனின் சித்தத்தை நிறைவேற்ற எதற்கும் தயாராகவிருக்கவேண்டும்.

**‘எல்லாம் நிறைவேறிற்று’**

**[யோவான் 19:29-30]**

இயேசு காடியைச்சுவைத்தபின் “எல்லாம் நிறைவேறிற்று” என்றார். பின்பு தலைசாய்த்து ஆவியைக்கையளித்தார். மீட்பின் இரட்சணியத்தின் சிலுவை மரணத்தை நினைவிலிருந்தி கிறிஸ்துவுக்குள் மீண்டும் பிறந்து இறை வழி தொடர பிரார்த்திப்போம்.

**‘என் ஆவியை ஒப்புவிக்கின்றேன்’ [லூக்காஸ் 23:44-46]**

ஏறக்குறைய ஆறாம் மணி நேரமாயிருந்தது. ஒன்பதாம் மணிநேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. சூரியன் இருளடைந்தது. தேவாலயத்தின் திரைச்சீலை நடுவில் இரண்டாகக் கிழிந்தது.

“தந்தையே, உமது கையில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன்” என்று இயேசு உரக்கக் கூவினார். இதைச் சொன்னதும் உயிர் நீத்தார்.

இயேசுவின் இறுதி வேண்டுதலினால் கூட பிதாவிடம் சரணடைகின்றார். எமது வாழ்க்கையில் வரும் சோதனைகளை ஏற்று இறைவனிடம் சரணடைவோம்.

**இயேசுவின் சிந்தனையுடன் வாழ்…**

சாவதிலும் ஒரு திருப்புமுனையைக் காட்டினார் இயேசு. இயேசு ஒரு இலட்சியத்திற்காக அல்ல. மக்களுக்காக துன்புற்று இறந்தார். இறையரசுக் காக வாழ்ந்த இயேசு இறையரசு மக்களின் வாழ்வில், மக்களின் வாழ்வாக பிரதிபலிக்க வேண்டும் என விரும்பினார்.

எனவே, மக்களை அன்பு செய்தார். பாகுபாடின்றி அன்பு செய்தார். பரிவு நிறைந்த இதயத்துடன் அன்பு செய்தார். அவரது அன்பால் மக்களுக்காகத் தம்மை அர்ப்பணித்துத் “தம் நண்பர்களுக்காக உயிரைக்கொடுப்பதைவிட மேலான அன்பு யாரிடமும் இல்லை” என நம்பினார். ஆக, இயேசுவின் சீடர்கள் மக்களை அன்பு செய்யாமல், மக்கள் நலனையே மனதில் கொள்ளாமல் மக்களோடு ஒன்றிக்காமல், வெறும் இலட்சியம் ஒன்றுக்காக தம்மை அர்ப்பணிக்க முடியாது சாகத்துணியக்கூடாது. மக்களுக்காக இலட்சியம் பேசுபவர்களும், “யார் அவர்கள் மக்கள்” என்று தெளிவடைய வேண்டும்.

இயேசுவின் சிந்தனையுடன் வாழ சிலுவையை நிமிர்ந்து பார்ப்போம். ○

**நோயல்**

---

# பல்கலைக்கழக அனுமதிக்கு பொது அறிவில் சித்தி கட்டாயம்

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதிக்கென உயர்தரப் பரீட்சை தவிர, தற்போது நடாத்தப்படும் பொது அறிவுப் பரீட்சையிலும் சித்தியடைவதைக் கட்டாயமாக்குவது தொடர்பாக அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

உயர்தரப் பரீட்சைகளில் நடாத்தப்படும் ஆங்கில பாடத்திலும் சித்தியடைந்திருப்பது அவசியமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் றஞ்சித் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தேசிய கல்வி ஆணைக்குழு பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சையை நீக்கப் போவதில்லை எனத் தெரிவித்த றஞ்சித் மெண்டிஸ்,

புதிய திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் பட்சத்தில், உயர்தரத்தில் சித்தியடைவது மாத்திரம் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியாகக் கொள்ளப்பட மாட்டாதெனத் தெரிவித்தார்.

உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவரொருவர் பொது அறிவுப் பரீட்சையில் சித்தியடையாத நிலையில் அவருக்கு மேலும் இரண்டு சந்தர்ப்பங்கள் வழங்கப்படுமெனவும் இது தொடர்பாக இதுவரை இறுதித் தீர்மானமெதுவும் எடுக்கப்படவில்லை எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இத்தகைய மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் கல்விக்கான பொறுப்புக்களிலிருந்து அரசாங்கம் விலகிச் செய்வதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்க முடியாதென்றும், கல்வியின் தரத்தை மேம்படுத்துவதே இம்மறுசீரமைப்புகளின் நோக்கமெனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் றஞ்சித் மேலும் தெரிவித்துள்ளார். (க-7)

# உபகரணங்கள் வழங்கல்

(பொன்னாலை)

சங்கானையிலுள்ள நலன்புரி நிலையங்களில் உள்ள கூலித் தொழிலாளர்களுக்கு தொழில்சார் உபகரணங்களை மூவிமெண்டோ நிறுவனம் வழங்கியுள்ளது.

சங்கானை கிழக்கு, தெற்கு கிராம அலுவலர் பிரிவுகளில் வசித்து வரும் காங்கேசன்துறை, தெல்லிப்பழை, காரைநகர் ஆகிய பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கே இவ் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. கத்தி, மண்வெட்டி, அலவாங்கு போன்ற பொருட்களே நூற்றுக் கணக்கான குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. (க-49)

# குழந்தைகளுக்குக் கண்பார்வை கிடைக்க தனது உயிரைத் தியாகம் செய்த தாய்

பெற்றெடுத்த பிள்ளைகளுக்காகத் தாய்மார்கள் எத்தனையோ தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். உண்ணாமலே மனைவி உடலாலே தேய்ந்தாள் என வேதனைப்படும் கணவன்மார்களும் அனேகர் உளர்.

உண்ணாமல், உடலைத் தேய்த்து தன் மக்களை வளர்க்கும் தாய்மார்களைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டுள்ளவர்களுக்கு அதிர்ச்சியூட்டும் செய்தி கண்ணிழந்த தனது இரு புதல்வர்களுக்கு மீண்டும் பார்வை கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தனது உயிரையே தியாகம் செய்திருக்கிறாள் ஒரு தாய்.

சென்னையைச் சேர்ந்த பிரபல கட்டட ஒப்பந்தக்காரர் ஒருவரின் இரு குழந்தைகளுக்கும் கண்பார்வை கிடையாது. பிறக்கும் போதே கண்பார்வையற்றவர்களாக அக் குழந்தைகள் பிறந்தன.

குழந்தைகளுக்கு பார்வையை மீளக் கொண்டுவரவேண்டுமென்பதற்காகப் பெற்றோர் பணத்தைத் தண்ணீர் போல வாரியிறைத்தனர். கண் மருத்துவ வல்லுநர் பலரைச் சந்தித்தனர்.

யாராவது கண்தானம் செய்தால், அக்கண்களைப் பொருத்திக் குழந்தைகளுக்குப் பார்வையை ஏற்படுத்தலாமென டாக்டர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து அக் குழந்தைகளின் தாய், தனது இரு கண்களையும் ஒரு குழந்தைக்கு ஒன்றாகப் பொருத்தி அவர்களுக்கு பார்வையைக் கொடுக்க வேண்டுமெனக் கடிதமெழுதிவைத்துவிட்டு தூக்கிட்டு மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

இத் துயர சம்பவம் சென்னையை அடுத்த புறநகர்ப் பகுதியில் அண்மையில் நடைபெற்றது. (து)

# போசாக்கு உணவு வழங்கல்

(புங்குடுதீவு)

தீவக கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் தரம் - I மாணவர்களுக்குக் காலையில் போசாக்கு உணவு வழங்கப்பட்டு வருகின்றன. (க-126)

# நடிகர் ஜெமினி கணேசன் திடீர் மரணம்
## ரசிகர் கூட்டம் கண்ணீர் அஞ்சலி



பிரபல திரைப்பட நடிகரும் காதல் மன்னன் என அனைவரினாலும் அன்புடன் அழைக்கப்பட்டவரும், எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன் ஆகியோர் திரைப்பட உலகில் கொடிகட்டிப் பறந்த காலத்தில் தனக்கெனத் தனியிடமொன்றைப் பெற்றிருந்தவருமான நடிகர் ஜெமினி கணேசன் நேற்று அதிகாலை திடீர் மரணமடைந்தார்.

1947ஆம் ஆண்டு சினிமாவில் நடிக்கத்தொடங்கிய ஜெமினி கணேசன் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் ஹிந்தி ஆகிய மொழிகளில் 200க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். கடந்த ஓராண்டாக அவர் உடல் நலக் குறைவால் அவதிப்பட்டார். இதையடுத்து தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்தார்.

2 மாதங்களுக்கு முன்பு அவர் உடல்நிலை மிக மோசமானது. என்றாலும் தீவிர சிகிச்சைக்குப் பிறகு அவர் உடல்நிலை தேறியது. இதையடுத்து சில தினங்களுக்கு முன்புதான் அவர் நுங்கம்பாக்கத்தில் உள்ள வீட்டுக்குத் திரும்பினார்.


நேற்றுக் அதிகாலை 1.10 மணிக்கு ஜெமினி கணேசனுக்கு திடீரென கடும் மூச்சுத்திணறல் ஏற்பட்டது. சில நிமிடங்களுக்குள் அவர் மரணமடைந்தார். இறக்கும் போது அவருக்கு வயது 84.

ஜெமினி கணேசன் உயிர் பிரியும போது அவர் குடும்பத்தினர் அனைவரும் அருகில் இருந்தனர். இவருகக்குப் பரபல ஹிந்தி நடிகை ரேகா உட்பட 7 மகள்கள் மற்றும் ஒரு மகன உளளனர்.

ஜெமினி கணேசன் மரணமடைந்த தகவல் அறிந்ததும், உறவினர்கள் உடனடியாக நுங்கம்பாக்கம் சென்று அவர் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள். காலை 7 மணிக்கு அவர் உடல் கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டு வீட்டின் முன்பகுதியில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

திரைப்பட உலகில் தனக்கெனத தனிமுத்திரை பதித்த ஜெமினி கணேசன் சின்னத்திரையையும் விட்டு வைக்கவில்லை.

அவரது மறைவு திரைப்பட உலகுக்குத் தாங்கமுடியாத பேரிழப்பாகும். (து)



குஜராத் முதல்வர் நரேந்திர மோடிக்கு விசா மறுக்கப்பட்டதை மறுபரிசீலனை செய்ய முடியாது என்று அமெரிக்க தூதர் டில்லியில் அறிவித்தார்.



2002ஆம் ஆண்டுக்கான சிறந்த பாராளுமன்றவாதி விருதினை ஜனாதிபதி அப்துல்கலாமிடமிருந்து பிரதமர் மன்மோகன்சிங் பெற்றுக்கொண்ட காட்சி. அருகில் சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜி உள்ளார்.

## தீவிரவாதிகளின் வெறியாட்டம்
## பெண்களின் காது,உதடுகள் துண்டிக்கப்பட்டன

ஆபிரிக்க நாடான உகாண்டாவில் பெண்களின் மார்பகம் மற்றும் உதடுகளை அறுத்து தீவிரவாதிகள வெறிச்செயலில் ஈடுபட்டுள்ளனர்.

உகாண்டாவில் பல ஆண்டுகளாக உளநாட்டுக் கலவரம் நடந்துவருகிறது. டான் எல்லைப் பகுதியிலுள்ள தீவிரவாதிகள் அரசுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டுவருகின்றனர்.

டான் எல்லை அருகே உள்ள கிட்கம் மாவட்டத்தில் சுள்ளி பொறுக்கிகொண்டிருந்த ஏழு பெண்களை தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர். அந்தப் பெண்களின் உதடு, மார்பகம், காது போன்றவற்றை அறுதது துன்புறுத்தியுள்ளனர்.

தவிரவாதிகளுக்கெதிராக உகாண்டா இராணுவம் போதிய நடவடிக்கை எடுக்கவில்லை என இப்பகுதி மக்கள் புலம்புகின்றனர். தீவிரவாதிகளின் அட்டூழியத்துக்கு பயந்து ஒன்றரை லட்சம் மக்கள் வேறிடங்களில் அகதிகளாக வாழ்ந்துவருகின்றனர். (து)

## ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலை விரிவுபடுத்தும் திட்டம்
## விரைவில் முடிவு எடுக்க கொபி அனான் வேண்டுகோள்

ஐ.நா சீர்திருத்தம் தொடர்பான 63 பக்க அறிக்கை ஒன்றை கொபி அனான் தாக்கல் செய்திருக்கிறார்.

தற்போது நடைமுறையிலுள்ள விதிமுறைகளுக்கமைய ஐ.நா.சபையின பாதுகாப்பு கவுன்சிலில் 15 நாடுகள மட்டுமே இடம்பெறமுடியும். இதை 24ஆக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

சர்வதேச சமுதாயத்துக்கு பரந்த அளவில் பிரதிநிதித்துவம் கொடுக்கும வகையில் பாதுகாப்பு கவுன்சிலை விரிவுபடுத்துவது அவசியமாதலால் இது தொடர்பாக உறுப்பு நாடுகள் வரைவில் ஒரு முடிவு எடுக்கவேண்டும். வருகிற செப்ரெம்பர் மாதம் உலகத் தலைவர்கள் மாநாடு நடை பெறுவதற்கு முன்பாக கவுன்சிலை விரிவுபடுத்த உறுப்பு நாடுகள் சம்மதம் தரவேண்டுமென கொபி அனான அநத அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

கவுன்சிலை விரிவுபடுத்துவதில் 2 திட்டங்கள் உள்ளன என்றும் அவற்றுள் ஒரு திட்டப்படி இப்போதுள்ள 5 நிரந்தர உறுப்பினர்களுடன் கூடுதலாக புதிய 6 உறுப்பினர்களைச் சேர்ப்பதுடன் 10 தற்காலிக உறுப்பினர்களுடன் மேலும் 3 உறுப்பு நாடுகளையும் சேர்க்கலாம் எனவும் ஒரு திட்டம் பற்றிக் குறிப்பிட்ட அவர்,

2ஆவது திட்டப்படி நிரந்தர உறுப்பு நாடுகள் 5, தற்காலிக உறுப்பினர்கள் 10 தவிர, 8 புதிய உறுப்பினர்கள் 4 ஆண்டுகள் பதவியில் இருப்பார்கள் என்றும் அதற்குப் பிறகு அவர்களுக்கு உறுப்பினர் பதவியை புதுப்பிப்பதா, வேண்டாமா என்பது 4 ஆண்டுகளுக்குட் பிறகு முடிவு செய்யப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.


பாதுகாப்புக் கவுன்சிலில் எந்த மாற்றம் செய்தாலும் அதற்கு மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையான 191இல் 3இல் 2பங்கு ஆதரவு வேண்டும்

இந்த அறிக்கையில் மேலும் கூறி இருப்பதாவது:

ஒரு நாடு இன்னொரு நாட்டின் மது சட்டபூர்வமாகப் போர் தொடுக்க வேண்டுமானால், அதற்கு என்ன விதிமுறைகளைப் பின்பற்றவேண்டும என்பது நிர்ணயிக்கப்படவேணடும்.

2015ஆம் ஆண்டுக்குள் உலகில வறுமையை ஒழிக்க, பணக்கார நாடுகள் தங்கள் வருவாயில் 0.7 சதவதத்தைக் கொடுக்கவேண்டும்.

53 உறுப்பினர் கொண்ட மனித உரிமைக் கமிஷன் ஒழிக்கப்படவேண்டும். இதற்குப் பதிலாக சிறிய அளவிலான மனித உரிமைக் குழுவை உறுப்பு நாடுகள் தேர்நதெடுக்கவேண்டும். (து)





ஜபபான் தலைநகர் டோக்கியோவில் டைனோசர் கண்காட்சி தொடங்கியுள்ளது. இதில் அகழ்வாராய்ச்சியில் கிடைத்த டைனோசரின் எலும்புகள் மூலம் உருவாக்கப்பட்ட இராட்சத டைனோசர் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது. இந்த டைனோசர் 12.8மீற்றர் நீளமும், 272 கிலோ கிராம் எடையும் கொண்டதாக உள்ளது.

## போக்குவரத்து பிரச்சினை தீர்க்க கழுதைகள் இறக்குமதி

வங்கதேசத்தில் போக்குவரத்து பிரச்சினையைத் தீர்க்க கழுதைகளை அந்நாட்டு அரசு பயன்படுத்தி வருகிறது.

வங்களாதேசத்தில் போக்குவரத்துப் பிரச்சினைகளை தீர்க்க நூதன முறையை முதன் முறையாக அந்த நாட்டு அரசு கையாண்டுள்ளது.


பாரம் சுமந்து செல்லும் கழுதைகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் திட்டம் வகுதது முதல் கட்டமாக 20 கழுதைகளை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்துள்ளது.

அவை அங்குள்ள சிட்டகாங் மலைப் பகுதிகளுக்கு அனுப்பபடும. அந்தப் பகுதியைச் சேர்ந்த 3 மாவட்டங்களில் ரோடு இணைப்பு வசதிகள் இல்லாததால் அங்கு நவீனரக சாலைப் போக்குவரத்துகக்கு வழியில்லை.

மேலும் அதிக ஏற்றத்தாழ்வுள்ள மலைப்பகுதிகளில் ரோடுகள் அமைக்க பல மடங்கு கூடுதல் செலவாகும். இதனால் இப்போதைக்கு கழுதைகள் மற்றும் கட்டைக் குதிரைகள மூலம் பொருள் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

நேபாளம், பூடான் போன்ற பகுதிகளில் கழுதைகளும், கட்டைக் குதிரைகளும் போக்குவரத்துக்கு பயன்பத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

மேலும் கடந்த 20 ஆண்டுகளாக தீவிரவாதிகள் ஊடுருவல் பிரச்சினையும் அந்தப் பகுதியில் இருந்து வருகிறது. (து)



ஸ்ரீநகர் -முஷாபராபாத் இடையே ஏப்ரல் 7ஆம் திகதி பஸ் விடப்படுகிறது. இந்த பஸ்சில் பயணம் செய்வதற்காக விண்ணப்பம் பெறக் காத்திருக்கும் காஷ்மீர் வாசிகள்.

## ஜப்பானில் தொடரும் நில அதிர்வுகள்

ஜபபானில் இரண்டாம் நாளாகக் கடந்த திங்கட்கிழமையும் நில அதிர்வுகள் தொடர்ந்துகொண்டிருந்தன.

அங்கு ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கத்தில் ஒருவர் இறந்தார். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். ரிக்டர் அளவுகோலில் 7ஆகப் பதிவாகியிருந்தது இந்த நிலநடுக்கம்.

இந்நிலையில் திங்கட்கிழமை ஃப்யூகுகா பகுதியில் 2,800 பேர் அவர்களது வீடுகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு, தாற்காலிக முகாம்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

ஜெங்காய் பகுதியில் மேலும நில அதிர்வுகளும், சரிவுகளும் தொடரலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. ஜெங்காய் பகுதியில் பொலிஸ், இராணுவம், அதிகாரிகள் முகாமிட்டுள்ளனர். ஜெங்காயில் 750 பேர் வசித்தனர். அவர்கள் அனைவரும் ஃப்யூகுயுகா பகுதிக்குக் கொண்டுசெலலப் பட்டுவிட்டனர். (து)

# தரம் – 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

இல:01 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

☞ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

☼ கீழே தரப்பட்டுள்ள படங்களை அவதானித்து அவற்றுடன் பொருத்தமற்று அமையும் விடைக்குரிய இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

01. 

1) நீரிலும் நிலத்திலும் வாழும்.
2) இதன் ஒரு பருவம் "வாற்பேய்" என அழைக்கப்படும்.
3) இது தாவரச் சாற்றை உணவாகக் கொள்ளும். (........)

02. 

1) இவர்கள் இலங்கையில் வாழ்கின்றனர்.
2) இவர்கள் தமிழில் / சிங்களத்தில் கதைக்கக் கூடியவர்கள்.
3) இவர்கள் இஸ்லாம் சமயத்தையோ அல்லது பௌத்த சமயத்தையோ சேர்ந்தவர்கள் ஆவர். (........)

☼ 5 வியாபாரிகள் விற்பனை செய்த தேங்காய்கள் பற்றிய விபரம் வருமாறு:


| கந்தையா | சின்னையா | பொன்னையா | இராமையா | நல்லையா |
|---|---|---|---|---|
| 200 | 243 | 190 | 310 | 300 |


03. அதிகம் வியாபாரம் செய்த வியாபாரி யார்? (............................)


04. மிகக் குறைந்தளவு வியாபாரம் புரிந்தவர் யார்? (............................)

05. இவர்கள் எல்லோராலும் விற்கப்பட்ட தேங்காய்கள் எத்தனை? (............................)

☼ கீழ்வரும் உருக்களில் ஒன்று ஏதோ ஒரு காரணத்தால் ஏனையவற்றில் இருந்து வேறுபடுகின்றது. வேறுபாடான உருவின் கீழ் கோடிடுக.

06. 

07. 

08. 


☼ கீழே தரப்பட்டுள்ள பந்தியைக் கவனமாக வாசிக்குக.

காலையில் புல் மேய வந்த மான், குரங்கின் நிலை கண்டு மிகவும் வருந்தியது. அது குரங்கைப் பார்த்து, "என் வீட்டுக்குப் பக்கத்தில் முயல் வைத்தியர் இருக்கின்றார். அவரிடம் சென்றால், காய்ச்சலுக்கு மருந்து தருவார். நான்கைந்து நாட்களில் உடல் நலமாகிவிடும். என்னுடன் வருவாயா?" என்று கூறி அழைத்தது.

09. காய்ச்சலால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தவர் யார்?

(.............................................................................................)

10. வைத்தியம் செய்யக்கூடியவர் யார்?

(.............................................................................................)


11. "வருந்தியது" என்னும் சொல்லுக்கு ஒத்தசொல் ஒன்று தருக?

(.............................................................................................)

12. "குரங்கு" என்பதன் ஆங்கிலச் சொல்லை எழுதுக?

(.............................................................................................)

☼ கோலத்தை அவதானித்து இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.

13. 


14. 


15. 


☼ சரியான விடையைத் தெரிவு செய்க.

16. காலை முதல் மாலை வரை சூரியனை நோக்கியவாறு காணப்படும் மலரையுடைய தாவரம்.
1) நாலுமணிப் பூச்செடி 2) மல்லிகை 3) செவ்வந்தி 4) சூரியகாந்தி

17. பறந்து செல்கின்ற போதிலும் முட்டை இடாத உயிரினம்.
1) காகம் 2) வௌவால் 3) பருந்து 4) வண்ணத்துப்பூச்சி

18. எப்போதும் எல்லாப் பக்கமும் சமமாய் அமையும் கணித உரு.
1) வட்டம் 2) முக்கோணி 3) சதுரம் 4) செவ்வகம்

19. கடிகார முகப்பில் 12.00 மணி காட்டும் போது நடைபெறக்கூடியது.
1. பாடசாலைக்கு புறப்படுதல் 2) பறவைகள் இரை தேடிப் பறத்தல்
3. உறக்கத்தில் இருத்தல் 3) இராப்போசனம்

20 "இலங்கை ஒரு தீவு. தீவு என்பது நான்கு பக்கமும் நீரினால் சூழப்பட்ட நிலப்பிரதேசமாகும்" எனவே இலங்கை பற்றிய கூற்றுக்களில் சரியானது.
1) இலங்கை அயல்நாட்டுடன் தரைவழிப்பாதையை வைத்துள்ளது.
2) இலங்கையில் இருந்து அயல்நாடான இந்தியாவிற்கு புகையிரதத்தில் பயணம் செய்யலாம்.
3) இலங்கையை அயல்நாடுகளில் இருந்து பிரிக்க மதில் கட்டப்பட்டுள்ளது.
4) இலங்கையைச் சூழ்ந்து கடல் காணப்படும்.

☼ சரியான விடைக்குரிய இலக்கத்தைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

21. அம்மாவுக்கு வயது 30 ஆகும்போது மகனுக்கு வயது 7 ஆகும். மகனுக்கு வயது 30 ஆகும்போது அம்மாவின் வயது என்ன?
1) 7 2) 23 3) 37 4) 53 (...............)

22. ஒரு வீட்டில் வயதில் கூடியவராக இருக்கக்கூடியவர்.
1) அப்பப்பா 2) அப்பா 3) அண்ணா 4) அக்கா (...............)

23. இலங்கைக்கு அண்மையில் உள்ள பெரிய நாடு.
1) அமெரிக்கா 2) நோர்வே 3) இந்தியா 4) இங்கிலாந்து (...............)

24. மலேரியா நோய் காவியாக தொழிற்படுவது
1) நுளம்பு 2) ஈ 3) கொசு 4) பன்றி (...............)

25. கீழ்வரும் சொற்களில் எது இடமிருந்து வலமாகவோ அல்லது வலமிருந்து இடமாகவோ எப்படி வாசித்தாலும் ஒரே பொருளையே தரும்.
1) அதிபதி 2) விகடகவி 3) நீதிபதி 4) அகடவிகடம் (...............)

☼ சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

26. ஒரு பண்ணையில் 40 பசுக்களும் 20 ஆடுகளும் 30 கோழிகளும் உள்ளன. அங்குள்ள பசுக்கள், ஆடுகள், கோழிகள் யாவற்றினதும் கால்களின் எண்ணிக்கை எத்தனை ? (...............)

27. 1 Kg சீனியின் விலை ரூபா 38.00 ஆகும். மஞ்சு கடையில் 2 Kg 250g சீனி வாங்கினாள். மஞ்சு தான் வாங்கிய சீனிக்காக செலுத்தவேண்டிய பணத்தொகை எவ்வளவு? (...............)

28. மாணவர் ஒருவருக்கு சீருடை தைக்க 2 ½ m வெள்ளைத்துணி தேவை. 40 பிள்ளைகளைக் கொண்ட தரம் 5 வகுப்பிற்கு எத்தனை மீற்றர் துணி தேவைப்படும்? (...............)

29. காலையில் சூரியனை நோக்கி நிற்கும் ஒருவரின் வலது கரம் காட்டும் திசை எது? (...............)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | A | C | B | A | C |
| B | A | A | B | A | D | C | B |
| A | A | C | A | D | C | B | A |
| D | B | C | B | A | B | A | B |
| A | A | A | A | B | A | D | A |
| A | B | A | A | B | A | A | A |
| C | A | A | B | A | A | C | A |
| E | E | E | C | A | D | E | B |

30) அருகே தரப்பட்டுள்ள உருவில் உள்ள எழுத்துக்களில் உள்ள 'A'களின் எண்ணிக்கையை சரியாக எண்ணி எழுதுக (...........)

☼ தரப்பட்டுள்ள சொற்கூட்டங்களில் ஒன்று ஏனையவற்றில் இருந்து வித்தியாசமானது. வித்தியாசமான சொல்லின் கீழ்க் கோடிடுக.

31.(1) காய் (2) பூ (3) பழம் (4) இலை (5) தாவரம்


32.(1) எறும்பு (2) ஈ (3) நுளம்பு (4) தும்பி (5) ஈசல்


33.(1) பேனா (2) பென்சில் (3) வெண்கட்டி (4) கரும்பலகை (5) கரிக்கட்டி


34.(1) உப்பு (2) தூள் (3) புளி (4) சோறு (5) மிளகாய்


35.(1) பிட்டு (2) இடியப்பம் (3) சொதி (4) தோசை (5) அப்பம்

☼ கீழ்வரும் உருக்களில் முதலாவதாகத் தரப்பட்ட உருவுடன் மிகவும் நெருங்கிய தொடர்பைக் காட்டும் உருவின் கீழ்க் கோடிடுக.

36. 

37. 

38. 

39. 

40. 

# கே.டானியல் - ஒரு சமூகத்தின் வரலாறு.

ஒடுக்கப்பட்ட மக்களின விடுதலைக்காகத் தமது எழுத்தைப் பயன்படுத்திய ஈழத்துத் தமிழ் எழுத்தாளாகளுள் கே.டானியுலு குறிப்பிடத்தக்க ஒருவா ஆவார். ஆழமாக வேரோடியுள்ள சாதீய வேர்களை யாழ்ப்பாணத் தீபகற்பகத்து மண்ணில் அறுப்பதற்கான முயற்சியில் தன்னை ஈடுபடுத்தியவர் டானியல். அவர் சார்ந்து நின்று பணியாற்றிய போராட்ட இயக்கங்களும டானியலின் செயற்பாடுகளுக்கு உந்து சக்தியை அளித்தன. அது மாத்திரமன்றி, ஒடுக்கப்பட்டோர் பற்றிய இலக்கியங்களை ஆக்கி அளித்ததுடன், அவற்றின் மூலமாகக் காலங்காலமாய் மேல்வாக்கத்தினரின் அடிமைகளாக்கப்படடிருந்த மக்களது உணர்வோட்டங்களையும், வாழ்வியல் பண்பாட்டுக் கூறுகளையும் உலகத்தவாமுன் வெளிச்சம் போட்டுக்காட்ட முயன்றவர் டானியல். அதேவேளையில் உயர்குடி நிலப்பிரபுத்துவ வர்க்கத்தினரின் இழிகுணங்களையும், ஒவ்வாத செயற்பாடுகளையும் மக்கள்முன் அம்பலப்படுத்தவும் டானியல் தவறவில்லை. இவையனைத்தும் சமூக மாற்றத்துக்கான பணியாகவும், தேவையாகவும் அவரிடத்தே அமைந்திருந்தது.

டானியலின் ஆளுமை பனமுகப் பரிமாணங்களைக் கொண்டது. அவரது ஆளுமையுருவாக்கத்தில் பல காரணிகள் பங்களிப்புச் செய்துள்ளன. பல மனிதர்களின் பங்களிப்பு அவருககுக் கிடைத்திருந்தது. 1926-1986 ஆண்டுகாலத்தையுள்ளடக்கிய வாழ்வியலில், இளமையில் வறுமையை அனுபவித்தவர் அவர். ஆரம்பக்கல்வியுடன் படிப்பை நிறுத்திவிட்டுக குடும்பத்திற்காக உழைக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகப் பல்வேறு அடிப்படைத் தொழிலகளைச் செய்து களைத்துப் போனவர். சாதி வேற்றுமையின் கொடிய கரங்களுக்குள் நசிபட்டுக் கலங்கியவர். கொடுமைகளைக்கண்டு பொங்கியெழுந்தவர். பதினாறு வயதில் பொது வாழ்வில் இணைந்தவர். 1948 ஆம் ஆண்டு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தன்னைப் பிணைத்துக்கொண்டவர். சித்தாந்த வேறுபாடு காரணமாக அக்கட்சியானது பிளவுபட்ட 1964ஆம் ஆண்டுவரை, அக்கட்சியின் வளர்ச்சிக்காக உழைத்தவர். அதன்பின்னர் சீனச்சார்புக் கம்யூனிஸ்ட்டாகத் தன்னை மாற்றிக்கொண்டு, தோழர் என். சண்முகதாசனின் தலைமையை ஏற்றுச் செயற்பட்டவர். 1967 இல் உருவான ஸ்ராா லேத் தொழிற்சாலையில் பதினைந்து வரையிலான ஊழியர்களை வைத்து வேலைவாங்கும் அளவுக்குப் படிப்படியாகப் பொருளாதார ரீதியிலும் தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர்.

டானியல் சீனச்சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியாதரவுடன் தீண்டாமை ஒழிப்பு, வெகுஜன இயககததின் அமைப்பாளராகப் பணியாற்றியவேளையில் ஆலயப் பிரவேசம், தேநீர்க் கடைபபிரவேசம் முதலான சிறுபான்மைத் தமிழர் மகாசபையுடனான டானியலின் உறவு அறுபதுகளின் முற்பகுதியுடன் நின்றுவிட்டதும் குறிப்பிடத்தக்கது. 1979 அளவில் கலை இலக்கியப் பெருமனறம் அமைத்து மக்கள் இலக்கியம் என்ற பத்திரிகையின் மூன்று இதழினையும் வெளிவரச் செய்ததில் டானியலின் பங்கு பாரியது. சிறுபான்மைத் தமிழரின்உரிமைக் குரலினை எதிரொலிக்கும் பல சிறு சஞ்சிகைகள் பத்திரிகைகள் முதலானவற்றின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் டானியல் ஆற்றிய தொண்டு அளப்பரியது. அவை அற்ப ஆயுளில் மடிந்தமை வேறுவிடயம.

டானியல் எழுத்தைத் தொழிலாகக்கொள்ளாது, அதை ஒடுக்கப்பட்ட மக்களது விடுதலையைப் பெறுவதற்கான ஆயுதமாகப பயன்படுத்தினார். உலக வியாபகரமானதோர் சமதர்மக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டு உழைக்கும் மக்களுக்காகப் போராடினார். அவர் இலக்கியவாதி மட்டுமல்லாது, உரிமைப் போராட்டச் செயற்பாடுகளில் நேரடியாகப் பங்கு பற்றிய போராளியுமாவார். 1963இல் யாழ்ப்பாணம் இந்துக்கலலூரியில் நடைபெற்ற சாகித்தியத் தமிழ்விழாவில் கூழ்முட்டை வீசியமை, யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் இடம்பெற்ற அரச ஊழியர் மீதான தாக்குதல், மாவிட்டபுரம் ஆலயப் பிரவேச வன்முறைகள, மட்டுவில பன்றித்தலைச்சி அம்மன் கோவில் பொங்கல் தினத்தன்று பொங்கல் பானைக்குள் கொண்டு சென்ற கைக்குண்டு வெடித்தமை முதலான பல சிறுபான்மைத் தமிழர்களின் சாதீயத்துக்கெதிரான போராட்டங்களின் பின்னணியில் டானியல் இருந்துள்ளார் என்பதை மறுப்பதற்கில்லை. டானியல் 1971ஆம் ஆண்டு 11 மாதங்கள் வரையில் சிறையிலிருந்தவர். சீனக் கம்யூனிஸ்ட் கட்சயின் தடையின் போது இச்சம்பவம் நிகழந்தது. சேகுவாராக கிளர்ச்சியினால் இது ஏறபட்டது. டானியல் எதிர்பார்தத அரசியல் கிடைக்காதமையினால் ஏற்பட்ட விரக்தி, அவரை எழுபதுகளின் முறபகுதியிலிருந்து அரசியலில் அதிக ஆர்வம் கொள்ளாது ஒதுங்கியிருக்கச் செய்தது. அதற்காக முற்று முழுதாக அரசியலைப் புறக்கணிக்கவும் அவரால் முடியவில்லை.

டானியலின் எழுத்துப் பணியானது, ஈழத்தின் எந்தவொரு ஒடுக்கப்படட தமிழ் எழுத்தாளரும் ஆற்றாத அளவுக்கு ஆகர்சிப்பும், வல்லமையும் வாய்ந்தது. யாழப்பாணத்து அடித்தள மக்களிடையே பேச்சு வழக்கில் காணப்படும் நாட்டாரியல் பண்பாட்டுக் கூறுகளை உலக அரங்குக்கு முன்வைத்தமை சிறப்பான செய்லாகும். மேலும் டானியலின் பஞ்சமர், கோவிந்தன், அடிமைகள், கானல், பஞ்சகோணங்கள், தண்ணீா ஆகிய "பஞ்சமர்" வரிசை நாவல்கள் யாவும் ஒரு சமூகத்தின் வரலாறறுப் பதிவாக நின்று, அதன் இன்பியல், துனபியல் அனுபவங்களை எல்லைமீறாது நிதர்சனமாக்கியுள்ளன எனலாம். டானியல் எழுதிய முதல் நாவல் 1961இல் வீரகேசரியில் வெளிவந்த நெடுந்தூரம் ஆகும். அது இன்னும் அச்சேறவில்லை. அது முதல் முயற்சியாதலால் வெற்றி காணவுமில்லை. 'போராளிகள் காத்திருக்கின்றனா' நாவல் மீனவர் சமுதாயம் பற்றியது. பூமரங்கள், சொக்கட்டான், மையககுறி, இருளின் கதிர்கள், முருங்கையிலைக் கஞ்சி ஆகிய குறுநாவல்களைத தந்துள்ள டானியல் இறுதியாய் வரைந்த குறுநாவலான சாநிழல் பல உண்மைச் சம்பவங்களை உள்ளடக்கிய போதிலும் இன்னும் அச்சேறவேயில்லை. சிறுபான்மைத் தமிழர் மகாசபை தீணடாமை ஒழிபபு வெகுஜன இயக்கம் ஆகியன நடத்திய பிரசாரக் கூட்டங்களில் டானியல எழுதிய நாடகங்கள் பல மேடையேறியுளளன. சிலவற்றுக்கு அவரது கதை பயன்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை வானொலியில அவரது சிறுகதைகளான தக்காளிப் பழங்கள், உலகங்கள் வெல்லப்படுகின்றன முதலியவை நாடகமாக நடிக்கப்பட்டன.

1948-1986 காலப்பகுதியில் சுமார் 150 சிறுகதைகள் வரையில் டானியல் படைத்திருக்கிறார். பல சிறுகதைகள் மீள் பிரசுரம் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு தனது எழுத்தாலும் செயலாலும் தான் வாழ்நத சமுதாயத்தின் விடிவுக்காக அாப்பணிப்புடன் பாடுபட்டவர்தான் டானியல். அவரது எழுத்துக்களைத் தமிழில் தலித் இலக்கியததின் முன்னோடி எழுத்துக்கள் எனப் பலர் இனங்கண்டு கூறியுள்ளனர். சாதாரண மனிதனாகப் பிறந்து, பல்வேறு தடைகளையும் தாணடி, சவால்களுகத முகங்கொடுத்து நின்று சமாளித்து வெறறியும் தோல்வியும் கண்டு படிபபடியாக உயர்ந்தவர் டானியல். அதேபோல் தன் சமூகததையும் உயர்த்துவதற்கு முன்னின்றுழைத்தவர். 1947இல் தனது 21வயதில் பிலோமின நவமணியைக் கரம்பிடித்து சுகதுக்கங்களைப் பகிர்ந்து ஆறு பிள்ளைகளைப் பெற்று நல்லறம் கண்டவா டானியல்.

டானியலின் கடைசி மூச்சும் ஒடுக்கப்பட்ட மக்களது விடிவு பறறியே பேசியது. அத்தகைய மனித உள்ளத்தின் வரலாறு யாழ்ப்பாணத்துத் தாழ்த்தப்பட்ட தமிழர்களின் வரலாறு. அவரின் வெற்றிகள் யாவும் அச்சமூகத்தின் வெற்றிகளே என்பதில் ஐயமில்லை.

**செல்லையா திருநாவுக்கரசு**
**விரிவுரையாளர், ஆசிரிய கலாசாலை, கோப்பாய்.**

## பத்திரிகை முறைப்பாட்டு ஆ.குழு யாழ்ப்பாணத்தில் கருத்தரங்கு

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு, யாழ்.பல்கலைக்கழக ஊடகப் பயிற்சிவள நிலையத்துடன் இணைந்து பத்திரிகையாளர்களுக்கும் சிவில் சமூகத் தலைவர்களுக்குமென இரு வெவ்வேறு கருத்தரங்குகளை வரும் 26ஆம் திகதி முதல் 29ஆம் திகதிவரை நான்கு நாட்களுக்கு யாழ்.பல்கலைக்கழக ஊடகவள, மற்றும் பயிற்சி மையத்தில் நடாத்தவுள்ளது.

பத்திரிகையாளர்களுக்கான கருத்தரங்கு 'பத்திரிகைத்துறையில் சுய கட்டுப்பாட்டு ஒழுக்கக் கோவையும் சட்டவிதிகளும் என்ற தலைப்பில் வரும் 28ஆம் திகதி காலை 9மணி முதல் 11 மணிவரை நடைபெறவுள்ளது.

சிவில் சமூகத் தலைவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'பத்திரிகைகளுக்கும் பொது மக்களுக்கும் இடையிலான உறவும் பத்திரிகை முறைப்பாட்டை ஆணைக்குழுவின் செயற்பாடுகளும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு 29ஆம் திகதி பி.ப.2.30மணிக்கு நடைபெறும்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் ஆணைக்குழுவின் அதிகாரிகள யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பாத்திரிகை அலுவலகங்களுக்கும் விஜயம் செய்து பிரதம ஆசிரியர் மற்றும் பத்திரிகையாளர்களையும் சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து)


### உளங்கனிய வாழ்த்துகின்றோம்

சைவ நற்தொண்டன், சைவமாமணி, சிவானந்த வாரிதி, அருள் மொழியரசு, வாரியார் வாரிசு, சைவத்தமிழ் இசை வாா'த', இசை ஞானத்திலகம், அருளமுதச் சொல்வாரி, தத்துவமுத்து, வியாசானுக்கிரக வாசக மாமணி, சைவாசாரிய சிகாமணி, வண் டமிழ்வேந்தன், செந்தமிழ் அரசு.

**சிவத்திரு. வ.குமாரசாமி ஐயா அவர்கள்**

23.03.2005ல் அகவை அறுபதை அடைவதை மேன்மேலும் வாழ வாழ்த்துகின்றோம்



"அகவை அறுபதான பெருமுவை
கையுல கதான தகைமை
மெய்மை யடைவதான மகிமை
செம்மை வளங்கா ஏனமக் கினிமை"

தர்மகர்த்தா சபையினா.
கிழவிதோட்ட விநாயகர் ஆலயம்.
கரவெட்டி கிழக்கு.

(C/11175)


## கற்குழி அகழ்தலை தடுத்து நிறுத்துக! ஜனாதிபதிக்கு மாவை எம்.பி.கடிதம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம்-கீரிமலை வீதியை அண்மித்த காணிகளில் கற்குழி தோண்டப்படுவதை உடனடியாக தடுத்துநிறுத்துமாறு கோரி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினா மாவை சேனாதிராசா ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

"மாவிட்டபுரம்-கீரிமலை வீதியில் உள்ள காணிகளை பலாலி விமான நிலைய ஓடுபாதை அமைப்புக்கென சட்டவிரோதமான முறையில் சுவீகரித்துள்ளமை பற்றி நான் பலமுறை தங்களுக்கு எடுத்துரைத்த போதிலும் இதுவரை ஆக்கபூர்வமான செயற்பாடுகளெதுவும் தங்களால் மேற்கொள்ளப்படவில்லை என்பதைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்."

அத்துடன் குறிப்பிடப்பட்ட பகுதியில் உள்ள காணிகளில் கற்குழி தோண்டப்படுவதை உடன் தடுத்துநிறுத்துமாறும் அப்பகுதியிலிருந்து வெளியேற்றப்படடவர்களை உடன் மீளக் குடியமர்தத நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

காங்கேசன்துறை சீமெந்து தொழிறசாலை இயங்கிய காலத்தில சீமெநது தயாரிப்பதற்காக இப்பிரதேசங்களில் கற்கள் தோண்டி எடுக்கப்படுவதால் சுற்றிவரவுள்ள தங்கள் காணிகள் பாதிக்கப்படுவதாகப் பொது மக்கள் தெரிவித்த ஆட்சேபனையையடுத்து அம்முயற்சி கைவிடப்பட்டது.

1990ஆம் ஆண்டுக்குப்பின் இராணுவ நடவடிக்கை காரணமாக மக்கள் அப்பகுதிகளிலிருந்து வெளியேறிய பின் அப்பகுதி அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இதனால் மூன்று ஆண்டுகளுககு முன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்குக்கொண்டுவரப்பட்ட போதிலும் நிவாரணமெதுவும் கிடைக்கப்படவில்லை.

மக்கள குடியமா்வு இல்லாத நிலைமையைப் பயன்படுத்தி இலங்கை இராணுவம் அப்பகுதியில் கற்குழிகளைத் தொடாந்து தோண்டுவதால் இப்பகுதியிலுள்ள வீடுகள் சேதமடைகின்றன.

இநத வீதி புகழ்பெற்ற ஐந்து ஈஸ்வரங்களில் ஒன்றான நகுலேஸ்வரத்துக்குச் செல்வதாகும். கற்குழிகளைத் தோண்டுவது 5000ஆண்டுகள் காத்திரம் கொண்ட இவ்வாலயத்தின் பெருமைக்கே ஊறுவிளைவிப்பதாகும்.

இவவிதம் கல் அகழப்படுவதால் இப்பகுதியிலுள்ள தமது வீடுகள் குடியிருப்புக்கே உதவாததாகப் போய்விடுமோ என இடம்பெயர்ந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

நினைவுக்கு அப்பாற்பட்ட காலத்திலிருந்தே கீரிமலை புனித தீர்த்தக்கேணி நிலத்தடியிலிருந்து ஊறும் தூய நீரினால் நிறைந்து விளங்குகிறது.

கல் அகழவினால் இந்நீரூற்றுக்கள் பாதிக்கப்படுமெனவும் அஞ்சப்படுகிறது.

எனவே இப்பகுதியில் கல் அகழ்தலை உடனடியாகத்தடுத்து நிறுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்வதுடன் முக்கியத்துவம் வாயந்த இவ்விடயம் தங்களது உடனடி கவனிப்புக்குளளாகுமென்றும் நம்புகிறேன் என மாவை சேனாதிராசா அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.(து)

## இலங்கை நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட்சை அடுத்தமாதம்

(கொழும்பு)

சுனாமி பேரலை அனர்த்தம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்த இலங்கை நிர்வாக சேவைக்கான வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் இரண்டாம் திகதி நடைபெறவுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 26ஆம் திகதி நடைபெறவிருந்த இப்பரீட்சை சுனாமி அனர்த்தம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

சுமார் 9ஆயிரம் பேர் இப்பரீட்சைககுத் தோற்றவுள்ளதாகவும் அவர்களுக்கான பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் அனுப்பி வைக்கபபட்டுள்ளதாகவும் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் ஏப்ரல் 2ஆம் திகதி இப்பரீட்சை 58பரீடசை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் கிடைக்காத பரீட்சார்த்திகள், ஒருங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளையுடன் தொடாபு கொள்ளுமாறு பரீட்சைத திணைக்களம் கேட்டுள்ளது. (க-7)

# உண்டி சுருங்குதல் பெண்டிற்கு மட்டுமன்றி குண்டர்க்கும் அழகு

மேலைத்தேய நாடுகளில் முக்கியமான ஆரோக்கிய பிரச்சினையாக உள்ள அதிக எடை/பருமன் (**Obesity**), அண்மைக்காலங்களில் எம்மவர்களையும பாதிக்கத்தொடங்கியது. இதறகு பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் முககியமானது அன்றாட வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றம், உதாரணமாக சொகுசான வாழ்க்கை (**Sedentary life Style**), செயற்கை உணவு முறை (**Fast and take away foods**), தேகாப்பியாசமின்மை, ஓய்வு நேரமினமை, அதிகமன உளைச்சல் என்பன சிலவாகும்.

எமது உடலில் கொழும்பு சத்து அதிகமாக படிவதனால் உடற்பருமன் கூடுகின்றது. உங்கள் எடை அளவுக்கு அதிகம் என்றால் உங்களுக்கு குணமாக்க முடியாத உங்கள் ஆயுளையும் ஆரோக்கியத்தையும் குறைக்கக்கூடிய பல நோய்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் பலமடங்கு அதிக மாகின்றது. அவற்றுள் முக்கியமான நோய்களாவன, உயர் குருதி அழுத்தம், சலரோகம், பாரிச வாதம், மூட்டு வாதம், தோல் நோய்கள், மலட்டுத் தன்மை, சுவாசிப்பதில் கடினம் மறறும சிலவகை புற்று நோய்கள.

ஆகவே அதிக உடற்பருமன் (**Obesity**) என்பது இலகுவில் குணமாக்க இயலாத ஒரு நோய என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். உடலில் கொழுப்பு சத்து எவ்வாறு படிந்துளளது என்பதைப் பொறுத்து இந்த நோய் இருவகைப்படும்.

1. **Apple obesity or Central obesity** இங்கு கொழுப்பு கூடுதலாக வயிற்றில் படிந்திருக்கும.

2. **Pear obesity** இங்கு கொழுப்பு கூடுதலாக இடுப்பு மற்றும் தொடை பகுதியில் படிந்திருக்கும்.

இவற்றுள முதலாவது வகை கூடுதலான ஆரோக்கிய கேட்டை



விளைவிககும்.

ஒருவருக்கு அதிக கொழுப்பு அல்லது பருமன் உள்ளது என்பதை அறிவது எப்படி?

ஆரோக்கியமான ஒருவருக்கு இருககவேண்டிய எடை அவரது உயரத்திற்கு ஏற்ப இருக்க வேண்டும். இதனை **BMI (Body mass index)** மூலமும் மற்றும் **waist/hip ratio** மூலமும் அள விடலாம்.

$$\text{BMI} = \frac{\text{நிறை (Kg)}}{\text{உயரம் (meter)}^2}$$

**BMI** 20-25 என்றால் அவர் ஆரோக்கியமான எடையை கொண்டுள்ளார் எனலாம்.

**BMI** 25-30 என்றால் கூடிய எடை, **BMI** 30-35 என்றால் அதி கூடிய எடை மற்றும்.

$$\frac{\textbf{Waist} \text{ (நாரி) } \textbf{Ratio}}{\textbf{Hip} \text{ (இடுப்பு)}}$$

ஆண்களுக்கு 0.95 அல்லது அதற்கு குறைவாக இருக்க வேண்டும். பெண்களுக்கு 0.8 அல்லது ஆணகளுக்கு 102 **cm** உம் பெண்களுக்கு **88cm** இருக்க வேண்டும் நாரி சுற்றளவு ஒரு அங்குலம் கூடினால் இருதய நோய வரக்கூடிய சந்தர்ப்பம் இரு மடஙகாகும்.

நிச்சயமாக நீங்கள் எல்லோரும் உங்கள் இளவயது (**Teenage**) அழகான தட்டையான வயிற்றை நினைவு கூரக்கூடியதாகவிருக்கும். வளர்ந்தவர்களிடத்தில் இந்த "பானை வயிறு" என்பது இரு பாலார்க்கும் தற்காலத்தில ஒரு பொதுவான பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. ஆனால் இதனால் வருங்காலத்தில் ஏற்படககூடிய ஆரோக்கியமின்மை பற்றி பெரும பாலானோர்க்கு தெரியாதுள்ளது. அல்லது தெரிந்தும் அக்கறையில்லை.

இனி இந்த முக்கியமான ஆரோக்கிய பிரச்சினையில் இருந்து மீள முடியுமா என பார்ப்போம்.

நிச்சயமாக ஆனால் இலகுவானதல்ல. ஒவ்வொருவரும் தங்களுக்கு இருக்கவேண்டிய ஆரோக்கிய நிறை மற்றும் நாரி/இடுப்பு விகிதம் என்ன என்பதை அறிந்திருக்க வேண்டும்.

உங்கள் எடையை ஒரே அளவில் பெற வேண்டுமாயின் நீங்கள் உணவின் மூலம் பெறும் சக்தி உங்கள் உடம்பிலிருந்து வெளியேறும் சக்திக்கு சமமாக இருக்கவேண்டும். (**Balancing act**) இதற்கு உணவுக்கட்டுப்பாடும் தேகாப்பியாசமும் முக்கியம்.

முதலில் உணவுக்கட்டுப்பாட்டைப்பற்றி பார்ப்போமானால் இது இலகுவான விடயம் அல்ல. மனக்கட்டுப்பாடு அவசியம். ஒரு நீணடகால முதலீடு. அவரவர் தஙகளது வாழ்க்கை முறைக்கு ஏற்ப உணவு முறையை திட்டமிடல் வேண்டும் இயலுமான வரை இயற்கையான உணவை உணணவும் செயற்கை உணவை (**Fast foods and take away foods**) தவிர்க்கவும். பச்சைக்காய்கறி மற்றும் நார்ததன்மையான உணவை தெரிவுசெய்யவும் இரணடாந்தரம் உண்பதையும் எஞ்சிய உணவை உண்பதையும் தவிாக்கவும். சாப்பாட்டு நேரத்தைவிட இடைக்கிடை (நொறுக்குத்தீனி) உண்பதை விடவும், சோறு மற்றும் மாப்பொருள் உணவின் அளவை குறைக்கவும். இயலுமான வரை குடிவகைகளை (**Alcohol**) குறைக்கவும் முக்கியமாக விருந்துகளில் மனதை கட்டுப்படுத்தவும் (**cakes, sweets, puddings, chocholates** போன்றவற்றை தவிர்க்கவும்.

அடிக்கடி எடையை அளந்து குறித்து கொள்ளலாம். இயலுமான அளவு ஒரு திட்டமிட்ட உணவுப்பழக்கத்தை அன்றாட நிகழ்வாகக்கொண்டுவர முயறசிக்கவும். உணவுக்கட்டுப்பாடு என்பது விரதமிருப்பதோ அல்லது உணவைக்குறைத்து உண்ணுதலோ அல்ல என்பதை முக்கியமாக நினைவில் கொள்ளவும்.

இனி தேகாப்பியாசத்தைப் பற்றி பார்ப்பபோமானால் இதுவும் இலகுவான விடயமன்று. மனக்கட்டுப்பாடும், திட்டமிடலும் மிக முக்கியம். தேகாப்பியாசத்திற்கு நேரம் ஒதுககுவதென்பது கடினமான விடயம். ஆனால் அதையும் நீங்கள் ஒரு அன்றாட நிகழ்வாக கொண்டு வரவேண்டும் பொருத்தமான உடறபயிற்சியை தேர்ந்தெடுக்கவும யாவருக்கும் இலகுவானது.


வேக நடை, நடப்பதற்கு இடமிலலாவிடில் துள்ளல், கயிறாட்டம் போன்றவற்றை செய்யலாம். நீச்சல் மிகவும் நல்லதொரு உடற்பயிறசி. தெரிவு செய்தபின ஒழுங்காக கிரமமாக பயற்சி செயய வேண்டும் வயது முதிர்ந்தவர்களும் தங்களுககு இயலுமானவரை மெதுவாக தொடாங்கி பின் உடல் நிலையை பொறுத்து கூடுதலாக செய்யலாம்.


துர் அதிஷ்டவசமாக இப்பொழுது நம் இளம் சமுதாயம் கூட தங்கள் கூடுதலான நேரத்தை **T.V.** பார்ப்பதிலும், உடற்பயிறசியற்ற பொழுது போக்குகளிலுமே செலவழிக்கின்றார்கள். அவர்களது விளையாட்டு நேரம் ரியூசன வகுப்புகளிலும், பியாணத்திற்கும் ஆக ஒதுக்கப்பட்டுள்ளது.


வாசகர்களே இன்றிலிருந்து உங்கள் அன்றாட வாழ்க்கை திட்டமிடலில் உணவுக்கட்டுப்பாடடிற்கும். உடற்பயிற்சிக்கும் சோத்து இடமளியுங்கள். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.


நன்றி
தமிழ் உலகம்

# முரளியின் திருமணம்.









# மீள்பார்வை

## பிரியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

(தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 15



## அத்தியாயம் V

***சபாநாயகர், பிரதிச் சாபநாயகர் குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோரைத் தெரிவு செய்தல்***

புதிதாக தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தின் முதலாவது கடமை 3 தலைமை தாங்கும் அலுவலர்களையும் தெரிவு செய்வது தான் அத்தகைய தெரிவுக்காக நிலையியயற் கட் டளை 3 இன் கீழ் விசேட நடைமுறையொன்று குறித்துரைக்கப்பட்டுள்ளது. சபாநாயகர் ஒரு புதிய பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தில் அல்லது அப் பதவியில் வெற்றிடம் ஏற்படும் போது தெரிவு செய்யப்பட வேண்டும் நிலையியற் கட்டளை 4 இன் கீழ் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளபோது ஒவ்வொரு உறுப்பினருக்கும் வாக்குச் சீட்டு வழங்கப்படவேண்டும் உறுப்பினர் தாம் வாக்களிக்கின்ற ஆளின் பெயரை அதில் எழுதுவதுடன் தமது கையொப்பத்தையும் வைக்கவேண்டும்.

அதனைத் தொடர்ந்து வாக்குச்சீட்டுகள் சேகரிக்கப்பட்டு சபாபீடத்தில் வைத்து எண்ணப்பட்டு முடிவு அறிவிக்கப்படுகின்றது. நிலையியற் கட்டளை 4(6) இன்படி இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் இருந்தால் வெற்றிபெறுபவர் ஏனைய வேட்டபாளர்கள் ஒரு மித்துப் பெற்றவாக்குகளை விடக்கூடுதலான வாக்குகளைப் பெறவேண்டும்.

அவ்வாறில்லாவிட்டால் ஆகக் குறைந்த வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் விலக்கப்பட்டுவாக்கெடுப்பு மீண்டும் நடத்தப்படுகின்றது. ஒரு வேட்பாளர் அறுதிப் பெரும்பான்மையைப் பெறும் வரை அத்தகைய நடைமுறைமீண்டும் தொடரப்படுகின்றது.

மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்களிடையே அத்தகைய தேர்தல் நடைபெறும் போது இருவர் சம அளவான வாக்குகளைப் பெற்றிருந்தால் சீட்டிழுப்பின் மூலம் ஒருவர் விலக்கப்படல் வேண்டும் அவ்வாறே இரு வேட்பாளர்களுக்கிடையிலான ஒரு தேர்தலில் இருவரும் சம அளவான வாக்குகளைப் பெற்றிருந்தால் சீட்டிழுப்பின் மூலம் அல்லது செயலாளர் நாயகம் தக்கதெனக் கருதுகின்ற வேறு முறையில் வெற்றியாளரைத் தீர்மானிக்கலாம் எனினும் மொத்த உறுப்பினர்களான 225 பேரும் சபையில் சமுகமாயிருந்து வாக்களித்தால் எவையேனும் வாக்குகள் பழுதானவையாக இருந்தாலன்றி இது நிகழமாட்டாது.

சபாநாயகரின் தெரிவைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாகப் பிரமாணம் செய்கின்றனர் அதன் பின்னர் சபை பிரதிச் சபாநாயகரினதும் குழுக்களின் பிரதித் தவிசாளரினதும் தெரிவை மேற்கொள்கின்றது இவ்விரு அலுவலர்களினதும் தெரிவுக்கான நடைமுறை சபாநாயகரின் தெரிவுக்குக் கைக்கொள்ளப்படும் நடை முறையை ஒத்தது. எனினும் இவ்வேளையில் தேர்தலுக்குச் சபாநாயகர் தலைமை தாங்குகின்றாரென்பதே ஒரேயொரு வேறுபாடாகும்.

## அத்தியாயம் VI

***சபாநாயகரின் அதிகாரங்களும் ஒழுங்கைப் பேணுதலும்***

ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிப்பதற்குச் சபாநாயகரே பொறுப்புடையவராவார் முன்னறிவித்தல் கொடுத்துச் செய்யப்படும் ஒரு தன்னிலைப் பிரேரணை மீதல்லாமல் அவரின் முடிபை எதிர்த்து மனுப்பண்ணவோ அதனை மீளவோ முடியாது.

சபாநாயகர்தான் சபை விதிகளின் பாதுகாவலர் எனினும் அவர் ஒரு பாராளுமன்றச் சர்வாதிகாரியாக மாறுவாராயின் சபையின் விருப்பினால் அவர் கட்டுப்படுத்தப்படுவார் அவ்வாறே அவர் சபையினதும் அதன் உறுப்பினர்களினதும் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் செயற்படாவிட்டால் சபையின் விருப்பின் மூலம் அவரின் கடமைகள் அவருக்கு நினைவூட்டப்படும்.

கூட்டு மொத்தத்தில் நடைமுறை சார்ந்த வழக்கங்களிலிருந்து பிரித்தெடுக்கக்கூடிய கோட்பாடுகள் பின்வருமாறு.

1. ஒவ்வொரு உறுப்பினரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்த இயலச் செய்தல்
2. விவாதத்துக்கு போதிய வாய்ப்பை வழங்குதல்
3. அளவற்ற அவசரத்தில் முடிவுகள் எடுக்கப்படுவதைத்தடுத்தல்

பாராளுமன்ற நேரம் பெருஞ்செலவானதும் விலைமதிப்பிடமுடியாததுமாகையால் அது விரயமாக்கப்படாதிருத்தலை உறுதிப்படுத்த வேண்டியது சபாநாயகரின் கடமையாகும்.

***உரையாற்றும் உறுப்பினர்களுக்கான விதிகள்***

பாராளுமன்றத்தில் விவாதம் தொடர்பான அடிப்படை விதிகளை நிலையியற் கட்டளை 84 விதித்துரைக்கின்றது. உரையாற்றுகின்ற ஓர் உறுப்பினர் எழுந்து நின்று அக்கிராசனரை நோக்கியே உரையாற்ற வேண்டும் அவர் இடமாளித்தால் மட்டும் அவரைக்குறுக்கீடு செய்யலாம். எனினும் ஒழுங்குப் பிரச்சினையொன்று உழுப்பப்பட்டால் அவர் கட்டாயம் இடமளிக்கவேண்டும்.

***ஒழுங்குமுறை***

ஓர் உறுப்பினர் விடாப்பிடியாகக கூட்ட நடவடிக்கைகளைத் தடைப்படுத்துபவராக அல்லது குழப்புவராக இருந்தால் சபாநாயகர் அவ்வுறுப்பினரை அமைதியாக இருக்கும்படி எச்சரிக்க வேண்டும் எவரேனும் உறுப்பினர் படுமோசமாக ஒழுங்கற்ற முறையில் ஒழுகுவாராயின் அன்றைய எஞ்சிய நேரக் கூட்ட அமர்விலிருந்து உடனடியாக வெளியேறுமாறு அவருக்குக் கட்டளையிடலாம் . சபாநாயகர் முதலில் உறுப்பினரை எச்சரிக்க வேண்டும். உறுப்பினரொருவர் அதற்குக் கீழப்படிய மறுப்பாராயின் ஒழுங்கு மீறுகின்ற உறுப்பினரைச் சபா மண்டபத்திலிருந்து வெளியேற்றுமாறு சபாநாயகர் படைக்கலச் சேவிதரைக் கோரலாம் சபாநாயகரின் கட்டளைகளை உறுப்பினர் தொடர்ந்தும் எதிர்த்து நிற்பாராயின் அத்தகைய உறுப்பினரை அகற்றக்கூடியதாக அமர்வு ஒரு சில நிமிடங்களுக்கு இடைறிறுத்திவைக்கப்படலாம்.

இத்தண்டனை போதுமானதல்லவெனக் கருதினால் சபாநாயகர் நிலையியற் கட்டளை 74 இன் கீழ் அவ்வுறுப்பினரைப் பெயர் குறிப்பிடலாம் அவ்வாறு செய்கையில் குறித்த அவ்வுறுப்பினர் பாராளுமன்றத்தின் சேவையின் நின்றும் இடைநிறுத்தி வைக்கபடவேண்டுமென்ற பிரேரணையை உடனடியாகச் சபாநாயகர் சபைக்கு விடவேண்டும் அத்தகைய ஒரு பிரேரணைக்குத் திருத்தமோ அதன் மீது விவாதமோ அனுமதிக்கப்படலாகாது. அத்தகைய ஒரு பிரேரணையைச் சபை முதல்வரோ அமைச்சரவையின் ஓர் அமைச்சரோ கொண்டு வரலாம். ஓர் உறுப்பினரால் அத்தகைய பிரேரணை முன்மொழியப்பட்டால் அது வழி மொழியப்படவேண்டும்.

இந்நிலையியற் கட்டளையின் கீழ் ஓர் உறுப்பினர் முதலாவது சந்தர்ப்பத்தில் ஒரு வாரத்துக்கும் அதே கூட்டத்தொடரில் இரண்டாவது சந்தர்ப்பத்தில் இரு வாரங்களுக்கும் இடை நிறுத்திவைக்கப்படலாம் பல உறுப்பினர்கள் ஒரு மித்துத் தவறிழைத்தாலன்றி ஒவ்வொரு உறுப்பினரும் தனித்தனியான பிரேரணை மூலம் இடைநிறுத்தப்படவேண்டும் அத்தகைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய ஓர் உறுப்பினர் மறுத்தால் தமது முடிபைச் செயற்படுத்துவதற்கு தேவையென அவர் கருதுகின்ற அத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதற்கு சபாநாயகர் உரித்துடையவராவார்.

இதே ஏற்பாடு முழுப்பாராளுமன்றக் குழுவில் புரியப்படும் ஒத்ததவறுகளுக்கும் ஏற்புடையதாகும். எனினும் அத்தகைய நிலைமையில் குழுவின் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டு உறுப்பினரைப்பெயர் குறிப்பிடுவதற்குத்தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்குச் சபை மீண்டும் கூட வேண்டும்.

ஓர் உறுப்பினரைப் பெயர் குறிப்பிடுதல் நடைமுறையில் மிக அரிதாகச் செய்யப்படுவது ஓர் உறுப்பினரைப்பெயர் குறிப்பிடுவதற்கான ஒரு பிரேரணை தோல்வியடையுமாயின் அது சபையில் ஒழுங்கைப் பேணுவதற்கான சபாநாயகரின் ஆற்றல் மீது விடுக்கப்படும் பாரதூரமான ஒரு சவாலாகும். (தொடரும்)

# அழைக்கப்பட்ட 1200 பேரில் 570 பேரே சமுகமளித்தனர்

## எழுதுவினைஞர் சேவையில் அசமந்தப்போக்கு

(கொழும்பு)

அரச சேவையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அண்மையில் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோளை அடைய முடியவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எழுது வினைஞர் சேவையின் இரண்டாம் தரத்திற்கு பதவி உயர்த்துவதற்காக கடந்த 2002ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டிப் பரீட்சையின் மூலம் நேர்முகப் பீட்சைக்கு 1200 பேர் அழைக்கப்பட்டிருந்தபோதும் 570 பேர் மாத்திரமே நேர்முகப் பரீட்சையில் கலந்துகொண்டுள்ளனர். எனவும் இது எதிர்பார்க்கப்படாத ஒன்றெனவும் ஒன்றிணைந்த சேவைப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

இதற்காமைய 2002ஆம் ஆண்டு எழுதுவினையர் பரீட்சைக்குத் தோற்றிய மேலும் சிலரை இந்தப் நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பதற்கான கடிதங்களை வழங்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

'அரசசேவையில் நிலவும் வெற்றிடங்களில் மொத்த எண்ணிக்கை குறித்து இதுவரை உறுதியாக கணக்கிடப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ச-4)

# வருடாந்த ஆராதனை

(ஊர்காவற்றுறை)

தற்போது நடைபெற்று வரும் தென்னிந்திய திருச்சபையின் ஈஸ்ரர் வருடாந்த ஆராதனை எதிர்வரும் 27ஆம் திகதி வரை யாழ். நாலாம் குறுக்கு வீதியிலுள்ள ஆலய மண்டபத்தில் பாஸ்ரர் அருள்தாஸ் தமைமையில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக திரு கிறிஸ்ரி பிறேமகுமார் தெரிவித்துள்ளார். (7)

## "உமது பேரன்பின் பெருக்கினால் எனக்கு பதில் மொழி தாரும்"



### தவக்காலச் சிந்தனை

தடுமாறி வீழ்வதில் தவறில்லை - எழுந்திருக்க மனமில்லாமல் இருப்பதுதான் தவறு. தெரிந்தும் தவறு செய்பவர்கள், தங்களின தவறினால்அழிவுக்குச்செல்வதை விட அவர்கள் பிறவாதிருந்தால் நலமாக இருக்கும். தவறுவது மனித இயல்பு. காசுக்கு ஆசைப்பட்டு இயேசுவை தலை மைக் குருக்களிடம் காட்டிக் கொடுக்க யூதாஸ் முன்வருகின்றான். தன்னைக் காட்டிக் கொடுப்பவன் யாரென்று இயேசு அறிந்த போதும் அதனைப் பகிரங்கப்படுத்தாமல் யூதாசுக்கு மட்டும் அறியும் வண்ணம் அதை வெளிப்படுத்துகிறார். அதுவே இயேசுவின் பெருந்தன்மை.

அத்தகைய உயரிய பெருந்தன் மையை உணர்ந்த யூதாசும, 'நானோ ராபி' என்று கேட்டு தனது தவறினை உறுதி செய்கி றான். இருப்பினும் மனம் வருந்தாமல், மனம் திருந்தாமல் இயேசுவைக் காட்டி கொடுக்கிறான். வாய்ப்பு கிடைத்த போதும் மனம் திருந்தாமல் தவறிலேயே விழுந்து கிடப்பது அவனுக்கு அழிவைத் தருகிறது. ஆகவேதான் 'அவன் பிறவாமல் இருந்தால் அவனுக்கு நலம்' என்று இயேசு கூறிகிறார்.

காவலன்


# நல்லூர் பிரதேச சபை

## திருநெல்வேலி நவீன சந்தை மேல் மாடிக்கடை

# கேள்வி அறிவித்தல்

10.04.2005 திகதி முதல் கீழ்வரும் திருநெல்வேலிச் சந்தை மேல்மாடிக்கடையை வாடகைக்கு விடுவதற்கான கேள்வி

| கடை | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடியஆகக்குறைந் தகிரயத் தொகை (வற் தவிர்ந்தது) |
|---|---|---|---|
| திருநெல்வேலிச் சந்தை மேல் மாடிக் கடை இல-6 | 500.00 | 10000.00 | 108000.00 |

கேள்வி பத்திரம் வழங்கும் திகதி:-4.4.2005 திங்கள் 12.00 மணிவரை

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி:-5.4.2005 செவ்வாய் 10.00 மணிவரை

கேள்வி திறக்கும் திகதி :-5.4.2005 செவ்வாய் பி.ப.2.00 மணி

கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை காரியாலய அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பிரதேச சபை
திருநெல்வேலி
18.03.2005

பொன்னையா வைரமுத்து
செயலாளர்.

(C/1173)

உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர் - குறள்

# வலம்புரி

## யாழ். குடாநாட்டில் திருடர்களின் கை ஓங்குகிறது

யாழ்ப்பாண மக்கள் யுத்தத்தால் அனுபவித்த வேதனைகள் சமாதான உடன்படிக்கை காரணமாக சற்று தணிந்துள்ளது.

எனினும் அந்த மக்களின் இருப்பு அவர்களின் பாதுகாப்பு இவற்றிற்கு யாருமே பொறுப்பில்லாத நிலையில் வாழ்க்கை நகர்ந்துகொண்டிருக்கிறது.

அன்று எந்த நேரத்தில் ஷெல்வந்து விழும் என்ற ஏக்கம், இன்று எந்த நேரத்தில் திருடர்கள் வீட்டிற்குள் நுழைந்து கொள்வார்கள் என்ற பயம்.

பொலிஸ் நிலையங்கள், நீதி பரிபாலனங்கள் இயங்குகின்ற போது தமிழ் மக்கள் நிம்மதியாக நித்திரைகொள்ள முடியாமல் இருக்கின்றது! இதுபற்றி யாரேனும் கவலை கொள்வதாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் அமைப்பு, மக்களின் வாழ்க்கை முறை, இன, மொழி, உடன்பாடு என்பன தனித்துவமாக இருக்கின்றபோதிலும் "களவு" என்ற சீரழிவு இந்த மண்மீதான பற்றுதலை அடியோடு வெட்டிவிடும் போல் உள்ளது.

பாடுபட்டு சேர்க்கப்பட்ட சொத்துக்கள் யுத்தத்தால் அழிந்துபோயின. எஞ்சியவற்றைக் கூட காப்பாற்ற முடியாதவாறு திருடர்களின் தொழில் வேகமாக வளர்ச்சி கண்டுள்ளது.

பொலிஸ், இராணுவம் சூழ்ந்துள்ள யாழ்ப்பாணத்தில் திருடர்களின் கைவரிசை ஓங்குவதற்கான காரணம் தான் என்ன? இதுபற்றி அரச அதிகாரிகள் உணர்வுபூர்வமாக ஆராயவேண்டும்.

திருடர்களின் பெயர்ப் பட்டியல் பொலிஸ் நிலையங்களில் இருக்கின்றபோதிலும் அது தொடர்பில் விசாரணைகள், விளக்கங்கள் இடம்பெறுவதாக தெரியவில்லை. குறிப்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுகின்ற அனைத்து பொலிஸாருக்கும் திருடர்களின் பெயர் விபரம் நன்கு தெரியும். சில வேளைகளில் பொதுமக்களிடம் அகப்படுகின்ற திருடர்கள் உடனடியாக விடுகின்ற கோரிக்கை தங்களை ஒன்றும் செய்யாமல் பொலிஸாரிடம் ஒப்படையுங்கள் என்பதாகும்.

பிடிபட்ட திருடன் தன்னை பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு கூறுவானாயின், பொலிஸாருக்கும் திருடனுக்கும் இடையிலான உறவுமுறை எந்தளவு தூரம் நெருக்கமாக உள்ளதென்பதை உணர்ந்து கொள்ளமுடியும்.

மேற்கூறப்பட்டவை எல்லாப் பொலிஸாருக்கும் பொருத்தமுடையதல்ல. நேர்மையுடன் தமது கடமைகளைச் செய்கின்ற பொலிஸாரும் இருக்கவே செய்கின்றனர். தமது தொழிலை தெய்வமாக போற்றுகின்ற அந்த பொலிஸாரின் நேர்மையான நடவடிக்கைகள் மேலோங்கமுடியாதவாறு திருடர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் பொலிஸாரின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இதனால் ஒட்டுமொத்தப் பொலிஸாரும் குறை கேட்க வேண்டியதாகவுள்ளது. எதுவாயினும் யாழ்ப்பாணத்தில் தற்போது மிக வேகமாக இடம் பெற்றுவரும் திருட்டுச் சம்பவங்கள் குறித்து யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கும் நீதிமன்றங்கள், பொலிஸ் நிலையங்கள், அரச செயலகங்கள், பொது அமைப்புக்கள் கூடி ஆராய்ந்து ஆக்கபூர்வமான திட்டங்களை வகுக்க வேண்டும்.

இல்லையேல் திருடர்களின் திருட்டு கைவரிசையும் அதனோடு மனித உயிர்களின் பறிப்புகளும் மேலோங்குவது தவிர்க்கமுடியாததாகி விடும்.

## வெலிக்கந்தை சம்பவத்தில் உயிரிழந்தவர் குறித்து புலிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை

(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டத்திலுள்ள வெலிக்கந்தை பிரதேச தீவுச்சேனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் கொல்லப்பட்ட இருவர் தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக தமிழீழவிடுதலைப் புலிகளுக்கு அறிவிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மோதலில் உயிரிழந்தவர்களின் பிரேதப் பரிசோதனைகளை நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வடமத்திய பிரதேச பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெயந்தகமமே தெரிவித்துள்ளார்.

இந்த இரு சடலங்களையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் ஒப்படைக்குமாறு விடுதலைப் புலிகள் கோரும் பட்சத்தில் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும் ஐந்து நாட்களுக்குள் சடலங்களை யாரும் பொறுப்பேற்க முன்வராவிட்டால் அவற்றைப் புகைப்படம் எடுத்து விரல் அடையாளங்களையும் பதிவு செய்த பின்னர் அரசசெலவில் அவை அடக்கம் செய்யப்படும் எனவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (க-07)

## ஜனாதிபதி தேர்தலை நடாத்த இந்தியாவிடம் ரணில் உதவி

இலங்கை ஜனாதிபதி தேர்தல் உரிய காலப்பகுதியில் நடத்தப்படவேண்டுமென அரச தலைமைததுவத்துக்கு இந்தியாவினூடாக அழுத்தம் கொடுப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சி உத்தேசித்துள்ளதாக அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அடுத்த மாதம் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்குச் சென்று இதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளை எடுப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

புதுடில்லியில் இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவி சேனியாகாந்தி, தேசிய பாதுகாப்புத்துறை ஆலோசகர் நாராயணன் உட்படப்பலரை ரணில் சந்திப்பதற்கும்ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை கடந்த வாரம் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட மேற்கொண்டுந்தார்.இலங்கையின் அரசியல் நிலைவரம் சமாதான முயற்சிகள் குறித்தும் இந்தியத் தலைவர்களுடன்ஐ.தே.க.தலைவர் கலந்துரையாடுவாரெனத் தெரிவிக்கப்படுகிறது. (7)

## யாழ்.நகரில் உள்ள நன்னீர் கிணறுகள் மாசடையும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

கரையோரப் பகுதியை அண்மித்த யாழ்.நகரில் உள்ள பல நன்னீர்க் கிணறுகள் மாசடைந்து வருவதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி குணராசா தெரிவித்துள்ளார்.

யாழ். நகரின் கரையோரப் பகுதியில் இருந்து பிரதான வீதிவரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள நன்னீர்க் கிணறுகளில் 75 வீதமானவையும், பிரதான வீதியில் இருந்து ஆஸ்பத்திரி வீதிவரையுள்ள நன்னீர்க் கிணறுகளில 50 வீதமானவையும், ஆஸ்பத்திரி வீதியிலிருந்து ஸ்ரான்லி வீதி வரையான நன்னீர்க் கிணறுகளில் 30 வீதமானவையும் ஏனைய இடங்களில் உள்ள நன்னீர்க்கிணறுகளில்10 வீதமானவையும் மாசடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இப் பகுதிகளில் உள்ளகட்டடங்கள் மிக நெருக்கமாக உள்ளன. அத்துடன் நன்னீர்க்கிணறுகளுக்கு அருகாமையில் மலசலகூடங்களின் கிடங்குகள் அமைக்கப்படுகின்றன.

மேலும் நன்னீர்க் கிணறுகளுக்கு அருகாமையில் குழிகளை வெட்டி அதில் கடைகளினதும், தொழிற்சாலைகளினதும் கழிவுகளை புதைப்பதனாலும் நன்னீர்க் கிணறுகள் மாசடைந்து வருகின்றன இதற்கு எதிராக நாம் நடவடிக்கை எடுக்கவுள்ளோம் இதேவேளை நன்னீர்ககிணறுகளை மாசடையாமல் பாதுகாப்பது மக்கள் அனைவரதும் கடமையென உணர்ந்து செயற்பட்டால் நன்னீர் மாசடைவதை தடுக்கமுடியும் என தெரிவித்தார். (க-19)

## இலவச கணனிப் பயிற்சி நிலைய திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி பயின்று கொண்டிருக்கின்ற மாணவர்களின் கணனிக்கல்வி அறிவை மேம்படுத்தும் நோக்கத்தோடு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் இலவச கணனிப்பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்படஉள்ளன.

இதன் முதற்கட்டமாக நாளை வியாழக்கிமை மாலை 3.30 மணிக்கு முதலாவது இலவச கணனிப்பயிற்சி நிலையம் மாணவர் பேரவையின் தலைமைச் செயலகத்தில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் மாணவர் பேரவைஉறுப்பினர் இ.புவிராஜ் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட பேராசிரியர் கந்தசாமியும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடபேராசிரியர் என். சன்முகலிங்கன், யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் யோ.கலைவிழி, யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் சி.கிருஸ்ணாவும் கலந்து கொள் ளவுள்ளனர்.

முற்று முழுதாக இலவசமாகவே இப்பயிற்சி நெறிகள் நடைபெறவுள்ளன. பயிற்சி முடிவில் பரீட்சைகள் நடாத்தப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்படும். அடுத்தகட்டமாக தென்மராட்சி, வடமராட்சி, தீவகம் போன்ற இடங்களிலும் கணனிப்பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கணனிக்கல்வியை தொடர விரும்பியும் பொருளாதார நெருக்கடியினால் கற்கமுடியாமல் இருக்கின்ற வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அனுமதிகள் வழங்கப்படும். (க)

## சுனாமியால் பாதிப்புற்றோருக்கு விசேடசலுகையுடன் தொலைபேசி இணைப்பு

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு தொலைபேசிகளை இணைக்கும் போது சலுகைகளை வழங்க தபாற் தொலைத்தொடர்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இத்திட்டத்துடன் ஒருங்கிணைந்து துரித தபாற்சேவையை நடாத்தவும் ஆலோசித்துள்ளதாக தபாற்தொலைத்தொடர்பு அமைச்சர் டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

சர்வதேச தபால் அமைப்பின் ஒத்துழைப்பை இதற்காகப் பெற்றுக்கொள்ளவுள்ளதாகவும்,இவ் அமைப்பின் பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு வரும்போது தபாற் சேவையையும் தொலைத்தொடர்பு சேவையையும் விரைவுபடுத்த தேவையான மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-7)

## வருடாந்த மஹோற்சவம்

(பொன்னாலை)

மூளாய்-வதிரன்புலோ முத்துக்குமாரசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 16ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெற்றுவருகின்றன.

நாளை வியாழக்கிழமை காலை 10மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (க-49)

★ ★ ★

சங்கரத்தை- பிட்டியம்பதி ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 15ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12தினங்கள் நடைபெற்றுவருகின்றன. நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (க-49)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

இறைவனை நாம் விலை கொடுத்து வாங்க முடியுமா? அவன் விலை மதிப்பவனாயிற்றே, அவனையடைய நாம் எதை வேண்டுமானாலும் எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராகஇருக்கவேண்டும்

சுவாமி விவேகானந்தர்

## தீயில் எரிந்து வயோதிபர் மரணம்

வயோதிபர் ஒருவர் தனக்குத்தானே மண்எண்ணெய் ஊற்றி தீமூட்ட எரிந்து மரணமானார்.

இச்சம்பவம் கரவெட்டி சாமியன் அரசடி பகுதியில் நேற்று நண்பகல் 12மணியளவில் இடம் பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் அதேஇடத்தை சேர்ந்த முருகேசு கந்தப்பு (வயது 75) என்பவரே மரணமானவராவார்.

வீட்டின் பின்புறகாணிக்கு சென்றுமறைவான ஓர் இடத்தில் தீமூட்டி எரிந்துள்ளார். இதனால் உடல் முறாறக எரிந்து கருகியுள்ளது சம்பவம் பற்றி நெல்லியடி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச101)


### பதவி வெற்றிடம்

பிரபல தனியார் நிறுவனமொன்றிற்கு, யாழ். மாவட்டத்திற்கான விற்பனைப் பிரதிநிதி ஒருவர் தேவை. பொருத்தமானவர்கள் கீழ்வரும் முகவரிக்குத் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

கல்வித் தகைமை: க.பொ.த (சா/த)தரம். வயதெல்லை: 24 வருடங்கள்.

கீழ்வரும் முகவரிக்கு விற்பனையாளர் ஒருவர் தேவை (9503)

க.கு.கந்தையாபிள்ளை அன்சன்ஸ்
318, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்


## பொதுக்கட்டமைப்பினை..

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும் அரசும் இணைந்து நிவாரணப்பணிகளை மேற்கொள்ளும் வகையிலான இப்பொதுக் கட்டமைப்பை உருவாக்காமல் நிவாரணப்பணிகளை மேற்கொள்வது ஆற்றலை வீணாக்கும் செயல்.

எனவே ஆழிப்பேரலை தொடர்பான அமைச்சுகளின் எந்தஅழைப்புகளையும் இனிக்கூட்டமைப்பு ஏறகாது.பொதுக்கட்டமைப்பினை உருவாக்குவதில் அரசுதான தாமதம் காட்டிவருகிறது. ஆனால் அதற்கு விடுதலைப்புலிகளை குற்றம்சாட்டி தன்பிழையை மறைத்து வருகிறது.

இது தமிழர்களை இழிவுபடுத்தும் செயலாகும். இதனையெல்லாம் அரசுகைவிட்டுவிட்டு பொதுக கட்டமைப்பினை உருவாக்கவேண்டும். வடக்கு-கிழக்கில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் எதனையும் அரசு வழங்கவில்லை.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவது அரசின் கடமையாகும். ஆனால் அரசோ வடக்குக்கிழக்கை புறக்கணித்து வருகிறது.

இந்தக் கொள்கையை அரசு மாற்றிக்கொண்டு அரசு உடனடியாக பொதுக்கட்டமைப்பினை உருவாக்கவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

(ச-4)

## 10 அகதிகள்...

செய்தனர். விசாரணைகளை மேற்கொண்டநீதிவான் அவர்களின சொந்த இடங்களுக்கு அனுப்பிவிடுமாறு உத்தரவிட்டார். (ச-8)

## பொதுக்கட்டமைப்பில்...

களில் ஈடுபட்டுள்ளோம். ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுமாறும் விடுதலைப்புலிகளிடம் விரைவில் கோரவுள்ளோம் என்றார்.

எமக்கு வெளிநாடுகள் தாகக் கூறிய நிதிகள் எதுவும் இனாமாக கிடைக்கவில்லை. எமது திறைசேரியில்உள்ள நிதியில் இருந்தே இடம்பெயர்ந்தோருக்கான நிதியுதவிகளை வழங்கிவருகின்றோம்.

நிவாரண உதவியாக ஒருகிழமைக்கு 188மில்லியன் ரூபாவை அரசு திறைசேரி ஊடாக செலவிடுகின்றது என்றார். பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தினால் அரசிலிருந்து விலகிவிடுவோம் என்று ஜே.வி.பி. கூறுவது பற்றி கேட்டபோது அவ்வாறான ஒரு நிலைமை தோன்றாது என கதிர்காமர் தெரிவித்தார்.

அரசில் இருந்து பிரிந்துசெல்லும் எண்ணம் எதுவும் தமக்கு இல்லை என ஜே.வி.பி.எமக்குத் தெரிவித்துள்ளது. ஆனால் சில வேளைகளில் அவர்கள் சொந்த நிலைப்பாடுகளை எடுக்கலாம். ஏனெனில் அவர்கள் கூட்டமைப்பின் பங்காளிகள். அவர்களது தத்துவங்கள் வேறுபட்டவை.தமது விருப்பப்படி சொந்த செயற்பாடுகளை மேற்கொள்முடியும் எனக் கதிர்காமர் மேலும்கூறினார். (ச-8)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை தும்பளை முருகன் ஆலயத்தின் மஹாகும்பாபிஷேகப் பெருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை காலை 7மணி முதல் மாலை 3மணிவரை சுவாமிக்கு எண்ணைக்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

(க)

## சர்வதேச.....

நலன்புரி நிலையங்களிலும் தங்கிவாழும்மக்கள் பலவித குறை பாடுகளுக்கு உள்ளாகி இறப்போர் தொகை அதிகரித்து வருகிறது என்பதையும் தமிழ்ச் செல்வன்விளக்கினார். (ச)

## மருத்துவபீட...

பீடபழையமாணவர் ஒன்றியம யாழ்.போதனாவைத்தியசாலையிலகடமையாற்றும் வைத்தியநிபுணர்கள் ஆகியோரின் கருத்துக்களைக் கேட்கவுள்ளதாக மருத்துவபீடமாணவர் ஒன்றியத்தலைவர் காண்டீபன் வலம்புரிக்குத் தெரிவித்துள்ளார். (ச)

## பிரிட்டிஷ்...

இலங்கை மற்றும் இங்கிலாந்தில் செயற்பட்டது குறித்து என்னிடம் பேசியது இல்லை. அமைதிப் பேச்சுகளின் தலைமைப பொறுப்பிலுள்ள வகையில்பிரிட்டிஷ் அரசு அதிகாரிகளுடன் நான் தொடர்பு கொண்டு வருகிறேனேதவிர ஜெயதேவன் விவகாரம் குறித்து ஒரு போதும் கேள்வி எழுப்பப்படவில்லைஎன அவர மேலும் தெரிவித்துள்ளார். (ச)


### அறிவித்தல்

சுனாமியால் பாதிக்கப்பட்ட 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களின் கீழ்க் காணப்படும் விபரங்கள் எம்மால் சேகரிக்கப்பட்டு வருகின்றது. பொதுமக்களோ அல்லது பொறுப்பு வாய்ந்தவர்களோ கீழ்க் காணப்படும் விபரம் தெரிந்திருப்பின் பிள்ளைகளின் உயரிய நலன்கருதி கீழ்க்காணப்படும் முகவரிக்கோ அல்லது தொலைபேசி இலக்கத்திற்கோ உடன் அறியத்தரவும்.

- பெற்றோரை இழந்திருக்கலாம்
- நோயினால் பாதிக்கப்பட்டிருக்கலாம்
- காணாமல் போயிருக்கலாம்
- உறவினர் வீடுகளில் தஞ்சம் புகுந்திருக்கலாம்
- இல்லங்களில் அனுமதிக்கப்பட்டிருக்கலாம்
- வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கலாம்
- கல்வி புறக்கணிக்கப்பட்டிருக்கலாம்
- துஸ்பிரயோகத்திற்கு உட்பட்டிருக்கலாம்

**மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு**

அறை எண் 30,
யாழ். போதனா வைத்தியசாலை
தொ.இல: 2225657
மின்னஞ்சல் : dcpc jaffna@yahoo.com
இணையம்: www.pillaii.org
(C-1174)



ராஜா யாழ்ப்பாணம்
12/03/05 தொடக்கம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந், வடிவேலு அங்கிதா நடித்த




ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்து கொள்ளுங்கள். (பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30)

நிறைஞ்சனாஸ் சங்கானை
கமல் (இருவேடம்), மனிஷா கொய்ராலா நடித்த




கா.நே 11.00, 2.45 6.00 (பு.நே)

நாதன்ஸ் சினிமா
யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரிக்கு முன்பாக)
குளிரூட்டப்பட்டது
THE PASSION OF THE CHRIST
(இயேசு நாதரின் இறுதி 12 மணி நேரக்கதை)
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30(பு.நே)



கலைவாரிதி பண்டிதர்
ம.ந.கடம்பேசுவரன்
எழுதிய
பொறுப்பினை யான்
நாடக நூல் இன்று வெளியீடு

| | |
|---|---|
| காலம் | : (2005.03.23) இன்று புதன்கிழமை பி.ப. 3.30 |
| இடம் | : வட்டு. இந்துக் கல்லூரி, வள்ளியம்மை மண்டபம் |
| தலைமை | : வண. பேராயர் கலாநிதி க.ஜெபநேசன் அவர்கள் |
| பிரதமவிருந்தினர் | : திரு. சி.ஏ.மோகனறாஜ் அவர்கள் பிரதேச செயலாளர் வலி.மேற்கு |
| வரவேற்புரை | : செல்வி சு.தவராணி B.A(Hons) |
| ஆசியுரை | : மூதறிஞர், பண்டிதர் க.நாகலிங்கம். வண. கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் (அதிபர், புனித பத்திரிசியார் கல்லூரி) ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் |
| வாழ்த்து | : திருமதி கல்யாண சுந்தரேசன்B.Sc,M.A செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், கவிஞர் சோ.பத்மநாதன் |
| வெளியீட்டுரை | : கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை |
| பிரதி வழங்கல் | : கா.க.ரஜனி (கலாசார உத்தியோகத்தர்) |
| முதற்பிரதி | : திரு. ம.வ.கானமயில்நாதன் (உதயன் பிரதம ஆசிரியர்) |
| மதிப்புரை | : |

| இலக்கியப் பாங்கு | நாடகப் பாங்கு | சமூகப் பாங்கு |
|---|---|---|
| கலாநிதி சி.சிவலிங்கராசா (தலைவர், தமிழ்த்துறை யாழ்.பல்கலைக்கழகம்) | கலாநிதி த.கலாமணி (சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியியற் துறை, யாழ்.பல்கலைக்கழகம்) | ஈ.குமரன் (விரிவுரையாளர், தமிழ்த் துறை, யாழ்.பல்கலைக்கழகம்) |

| | |
|---|---|
| சிறப்பு நிகழ்ச்சி | : புலரி தாலாண்டு சஞ்சிகை அறிமுகம் |
| நன்றியுரை | : ந.குகபரன் B.A(Hons) ('புலரி' ஆசிரியர்) |

நாட்டு இலக்கிய ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம் (9501)

நிகழ்ச்சி சிறப்புற வாழ்த்துவோர்
பிரபல கட்டடப் பொருள் விற்பனையாளரும், தொழில்சார் உபகரணங்களும் இரும்புப் பொருள்களும் விற்பனையாளர்
T.P: 021 - 222 2901
சிற்றி ஹாட்வெயர்ஸ் அன் ஸ்ரோர்ஸ்
55-57 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்



சுப்பலோ வீடியோ ஓடியோ அன் கலர் லாப் நிறுவனம், ரவி டிஜிற்றல் ஏ வண் கலர் லாப் என்னும் இணை நிறுவனத்தினை இன்று (23.03.2005) முதல் மங்களகரமாக ஆரம்பித்து வைக்கின்றது.




ரவி
டிஜிற்றல் ஏ வண் கலர் லாப்

- 8R அளவு முதல் 10"x15" அளவுவரை தேவைக்கேற்ற அளவுகளில்...
- அல்ப வடிவமைப்பு வாழ்த்து அட்டைகள் மற்றும் கலண்டர் அழகுற அமைத்திட...
- தரமான முறையில் உங்கள் புகைப்படச் சுருள்கள் மற்றும் CD,பிளப்பி,டிஸ்க்,சிப்,mo டிஸ்க் ஆகியவற்றில் இருந்து சிறந்த முறையில் பிரதி செய்து பெற்றிட...

உங்கள் அனைத்து டிஜிற்றல் வேலைகளுக்கும் ரவி டிஜிற்றல் ஏ வண் கலர் லாப்புடன் இணையுங்கள்
அனைத்து புகைப்படத்துறையினரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2222082
இங்ஙனம் நிர்வாகத்தினர்
(c 1176)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.